Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ் : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மனழக்கான சாத்தியம் உண்டு.
27.°c 26.°c

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 343 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 19, செவ்வாய் 05.11.2013

## இசைப்பிரியா காணொலியை அரசு தட்டிக்கழிப்பின் விளைவு பாரதூரம்

### விசாரணை நடத்தி உண்மை கண்டறியப்பட வேண்டுமென சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, நவ.5
"இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் உண்மைகள் கண்டறியப்படவேண்டும். எனவே, உரிய விசாரணைகளை முன்னெடுத்து அதைச் செய்யவேண்டியது இலங்கை அரசின் கடமையாகும். இதைத் தட்டிக்கழித்தால்பாரதூரமான விளைவுகளை இலங்கை அரசு சந்தித்தே தீரும்."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவித்தார்.
இசைப்பிரியா தொடர்பில் சனல்- 4 தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள காணொலியை இலங்கை அரசும் இராணுவமும் நிராகரித்துள்ளன.

21

## கடலலையில் சிக்கி யாழ். மீனவர் சாவு

### கொழும்புத்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.5
இறால் பிடிப்பதற்காக நண்பர்களுடன் படகில் சென்ற மீனவர் கடல் அலையில் படகு அடித்துச் செல்லப்பட்டதால் கடலில் மூழ்கி உயிரிழந்தார். அவரது சடலம் நேற்று மீட்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கொழும்புத்துறையிலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

21

# வலி. வடக்கு வீடழிப்பை எதிர்த்து உண்ணாவிரதம்

### தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு மீள்குடியேற்றக் குழு முடிவு

யாழ்ப்பாணம், நவம்பர்05
வலி. வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடழிப்பு நடவடிக்கைகளை உடன் நிறுத்தக் கோரியும், அந்தப் பகுதிகளை மக்கள் குடியமர்வுக்கு விடுவிக்கக் கோரியும் எதிர்வரும் 12 ஆம் திகதியிலிருந்து தொடர் உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுக்க வலி. வடக்கு மக்கள் தயாராகி வருகின்றனர்.
இந்தப் போராட்டம் வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் என்று வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்
வலி. வடக்கில் தமிழ் மக்களின் உறுதிக் காணிகளான 6 ஆயிரத்து 382 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சுற்றி நிரந்தரப் பாதுகாப்பு வேலிகளை




இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.
இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் காணிகளில், இராணுவத்துக்கான 'யோக்கட்' தொழிற்சாலை, தியேட்டர், கோல்ப் விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப்பட்டுள்ளதுடன் விவசாயச் செய்கையும் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இந்த நிலங்களுக்குச் சொந்தமான மக்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கியுள்ளனர்.
கடந்த ஜனவரி மாதம் தாம் கையகப்படுத்தியிருந்த நிலப் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் வீடுகளைத் தரைமட்டமாக்கும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்திருந்தனர். இதனை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து அந்த நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது.
இந்த நிலையில் 10

21

## வெடி மருந்துடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ.5
11 கிலோ கிராம் வெடி மருந்துடன் குருநகரைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
குருநகரைச் சேர்ந்தவர்களான அ.லூடின் வோஷிங்ரன், எஸ். ஜோர்ஜ் ஜீவா

21

## இருதய சிகிச்சைப் பிரிவுக்கு புதிதாக நான்கு மாடிக் கட்டடம்

### ரூபா 725 மில்லியன் செலவில் போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், நவ.5
யாழ். போதனா வைத்தியசாலையில் இருதய சிகிச்சை மற்றும் இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு என 725 மில்லியன் ரூபா செலவில் நான்கு மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:
சுவிற்ஸர்லாந்தில் இயங்கும் சுவிஸ் - இலங்கை வர்த்தகச் சபையுடன் கலந்துரையாடி இந்தக் கட்டடத்தை நிர்மாணிக்கவும் அதில் உள்ளடங்கும் பிரிவுகளுக்குரிய உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதன்படி இந்தத்

21

## சிங்களக்குடியேற்றம் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது

### கைவிரிக்கிறார் யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவ.5
நாவற்குழியிலுள்ள அரச காணிகள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாதென்று கைவிரித்தார் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.
யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணி சிங்கள மக்களுக்கு எந்த அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்று ஊடகவியலாளர்கள் அரச அதிபரிடம் கேள்வி எழுப்பினர்.
இதற்குப் பதிலளிக்கையிலேயே அரச அதிபர் மேற்கண்ட

21

## டெங்கு அபாயம் கவனம்

யாழ்ப்பாணம், நவ.5
மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு நோயினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
மழை காலம் ஆரம்பித்து நேற்றுவரையான ஒரு மாத

21

## மிதிவெடி அகற்றலை பொறுப்பேற்றது அரசு

### ஐ.நா. அமைப்புகள் வெளியேறுகின்றன

யாழ்ப்பாணம், நவ.5
ஐ.நா. முகவர் நிறுவனங்களின் ஊடாக வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வந்த மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டு தேசிய மிதிவெடி செயற்பாட்டு நிறுவகம் ஊடாக அரசினால் முன்னெடுக்கப்படவுள்ளன.
இதற்காக வடக்கு மாகாணத்துக்கான அலுவலகம் ஒன்று கிளிநொச்சியில் விரைவில் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வடக்கில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் ஐ.நா. முகவர் அமைப்புக்களின் ஊடாகவே

21

## ஈழத் தமிழ் இளைஞர் லண்டனில் போராட்டம்

கொழும்பு, நவ. 5
பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளும் முடிவை பிரிட்டன் அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்தி ஈழத் தமிழரொருவர்



நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். சுப்பிரமணி பரமேஸ்வரன் என்ற இளைஞரே பிரிட்டன் பிரதமரின் இல்லம் அமைந்துள்ள டவுனிங் வீதியின் முகப்பில் இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்கியுள்ளார். பிரிட்டன் அரசு தனது முடிவை திரும்பப் பெறும் வரை போராட்டம் தொடரும் என்று பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (த-சி)

## தமிழகத்திலும் வெடித்தது போராட்டம்

### பெருமளவானோர் நேற்றுக் கைது

கொழும்பு,நவ. 5
கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பாக எவரும் கலந்துகொள்ளக் கூடாது என வலியுறுத்தி தமிழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற பேரறிவாளனின் தாயார் அற்புதம் மாள் உட்பட மாணவர்கள் பலரும்

21

# வலி.வடக்கில் வீடழிப்பு; தடுமாறிய அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவ.05
வலி.வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடுகள் அழிப்புத் தொடர்பில் நேற்று முன்னுக்குப் பின் முரணான தகவலை வெளியிட்டார் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், வலி.வடக்கில் இராணுவத்தினரால் வீடுகள் அழிக்கப்படுவது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், இது தொடர்பான தகவல்களோ, தரவுகளோ தமக்கு கிடைக்கவில்லை என்றும், ஊடகங்கள் வாயிலாகவே தான் இதனை அறிந்துகொண்டதாகவும், அலுவலக ரீதியாக அறிக்கைகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றும் கூறினார்.

அப்படியாயின் ஊடகங்களில் வெளியான தகவல்களின் அடிப்படையிலாவது அதனைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா என்று ஊடகவியலாளர்கள் மீண்டும் கேள்வி எழுப்பினர்.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் உயர் மட்டங்களில் பேசப்பட்டுள்ளது எனவும், தான் இது குறித்து எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வலி.வடக்கில் எத்தனை வீடுகள் இவ்வாறு இடித்தழிக்கப்பட்டுள்ளன என்று கேள்வி எழுப்பப்பட்டபோது, அது தனக்குத் தெரியாது என்றார் அரச அதிபர். அப்படியாயின் பிரதேச செயலர் இதுபற்றி உங்களுக்குத் தெரியப்படுத்தவில்லையா? என்று ஊடகவியலாளர்கள் கேட்டபோது,

மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வைத்து அவர் இதனை தன்னிடம் தெரிவித்ததாக அரச அதிபர் பதிலளித்தார்.

இதற்கிடையில் மேல் மட்டங்களின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைத் தான் அறிந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

சரி, அரசியல் மட்டம் நடவடிக்கை மேற்கொண்டது. அரச நிர்வாக மட்டத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று மீண்டும் ஊடகவியலாளர்கள் கேட்க, அரச நிர்வாக மட்டத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னர் அரசியல் மட்டம் நடவடிக்கை எடுத்துவிட்டது. சுமுகமான தீர்வு எட்டப்பட்ட பின்னர் நாம் ஏன் தலையீடு செய்வான் - என்றார்.

சுமுகமாக எட்டப்பட்ட தீர்வையும் மீறி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவே என்று அவரிடம் கேட்டபோது, இது உயர் மட்டங்களில் நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள் - என்றார்.

யாழ்.மாவட்டத்துக்கு வீடுகள் தேவையிருக்கின்றதென்று சகலரிடமும் கேட்கின்றீர்கள் அப்படியிருக்கையில் இருக்கின்ற வீடுகளை ஏன் இடித்தழிக்க வேண்டும் என்று அவரிடம் மீண்டும் கேள்வி தொடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அரச அதிபர், எனக்கு கிடைத்த அறிக்கையின் படி நல்ல நிலையிலுள்ள வீடுகள் இடிக்கப்படவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட வீடுகளே இடிக்கப்படுகின்றன. இருந்தும் சரியான தகவல் என்னால் சொல்ல முடியாமல் உள்ளது.

கொள்கை ரீதியிலானவை, நிர்வாக ரீதியிலானவை என்ற இரு செயற்பாடுகள் இருக்கின்றன. நாங்கள் நிர்வாக ரீதியிலான விடயங்களில் மாத்திரமே தலையிட முடியும். நிர்வாக ரீதியில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம். எடுத்திருக்கின்றோம். அரச அதிபருக்கு மேலாகவும் அதிகாரிகள் இருக்கின்றனர் - என்று கூறினார். (த-5)

## 'பன்மைத்துவ சிந்தனைகள்' செயல்திட்டம் இம்முறை கிழக்கில்

யாழ்ப்பாணம், நவ. 5
பன்மைத்துவ சிந்தனைகளை ஒரே குடையின் கீழ் கொணர்ந்து, இலங்கை குறித்த நேர்சிந்தனையை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு செயற்படும் "றண்" (மதர் சிறிலங்கா) நிகழ்வு எதிர்வரும் ஏழாம், எட்டாம் திகதிகளில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற உள்ளது.

2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்தால் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச அமைப்புக்களின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டதே 'மதர் சிறிலங்கா நிதியம்'. பொறுப்பு வாய்ந்த பிரஜை (Responsible Citizen - (R), ஐக்கியம் (Unity - (U), தேசியப் பெருமை (National Proud (N) ஆகியவற்றை உள்ளடக்கியதே RUN திட்டமாகும்.

"றண்" திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண முன்னணிப் பாடசாலைகளின் திட்டங்கள் முன்வைப்பும் (Presentation) அவற்றை நியாயப்படுத்தலும் எதிர்வரும் ஏழாம் திகதி திருகோணமலை உவர் மலை விவேகானந்த வித்தியாலயத்திலும், அடுத்த நாள் எட்டாம் திகதியன்று அம்பாறை சத்ததிஸ்ஸ மகா வித்தியாலயத்திலும் நடைபெற உள்ளது. நிகழ்வுகள் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை இடம்பெறும். பல்வேறு மட்டங்களிலும் விவாதித்து அவற்றைத் தொகுத்துப் பயன்படுத்துவதே இந்த அமைப்பின் நோக்கமாகும். இந்த வகை திட்ட நிகழ்வுகள் இதுவரை ஒன்பது மாகாணங்களிலும் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## மின் கம்பத்துடன் மோதியது பஸ்

குறிகாட்டுவானில் இருந்து யாழ். நோக்கி பயணிகளுடன் வந்த இ. போ.ச. பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் பிற்பகல் புங்குடுதீவு மடத்து வெளிப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது இரண்டு மின் கம்பங்கள் சேதமடைந்தன. அத்துடன் பஸ்ஸின் முன் பக்கமும் பலத்த சேதமடைந்தது. (த-17)

## தினமும் 100 பேர்வரை யாழில் ஆசனப்பதிவு

### கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு ரயிலில் செல்ல

யாழ்ப்பாணம், நவ.5
கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு செல்வதற்காக தினமும் 100 இற்கும் மேற்பட்டோர் யாழ்ப்பாணத்தில் முற்பதிவுகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் ரயில் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஆசன முற்பதிவுக்காக யாழ்.பண்ணைப் பகுதியில் உள்ள ரயில் திணைக்கள தொடர்பு உத்தியோகத்தரிடம் மேற்கொள்ள கடந்த மாதம் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த அலுவலகம் ஊடாக தாம் செல்லும் தினத்துக்கு 15 நாள்களுக்கு முன்னதாகவே பதிவை மேற்கொள்ள முடியும். இதன்படி தற்போது தினமும் 100 இற்கும் மேற்பட்ட பயணிகள் முற்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். வெள்ளிக்கிழமைகளில் 150 இற்கும் மேற்பட்ட பயணிகள் ஆசனப் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் ரயில் திணைக்கள தொடர்பு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (ஜ-14-15)

## 'வித்தி'க்கு இன்று பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.5
மூத்த பத்திரிகையாளர் நடேசபிள்ளை வித்தியாதரன் ஊடகத்துறைக்குத் துணிச்சலுடன் ஆற்றியுள்ள கருமங்கள் மற்றும் பணிகளைப் பாராட்டும் வகையில் திசை காட்டி நிறுவனம் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்.ஆனைப்பந்தியிலுள்ள திசைகாட்டி நிறுவனத்தில் இடம்பெறும். வித்தியாதரன் நிகழ்வில் சிறப்புரை ஆற்றுவார். மற்றும் பலர் அங்கு உரை நிகழ்த்துவர். (ஒ)

## வட்டுவாகல் பாலத்தை புனரமைக்க கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ.5
இறுதிப் போரின் போது அழிவடைந்த வட்டுவாகல் பாலம் இதுவரை புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றது. மழை காலம் நெருங்குவதால் மக்களின் போக்குவரத்துக்கு நெருக்கடி ஏற்படும் எனவும், பாலத்தை புனரமைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு வீதியில் வட்டுவாகலை முள்ளிவாய்க்காலுடன் இணைக்கின்ற பாலமாக வட்டுவாகல் பாலம் காணப்படுகின்றது.

440 மீற்றர் நீளமான இந்தப் பாலம் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பது தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டார் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்:
பிரதான வீதியின் இணைப்புப் பாலமாக இந்த பாலமே அமைந்துள்ளது, பல்லாண்டு கால வரலாறு கொண்ட இந்தப் பாலம் இதுவரையில் புதுப்பிக்கப்படாத நிலையில் உள்ளமை கவலையடைய வைக்கின்றது.

அண்மைக்காலமாக இந்தப் பாலம் மிக மோசமாக சேதமடைந்திருக்கின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது. இந்தப் பாலத்தில் ஒரே நேரத்தில் இரு வாகனங்கள் விலத்திச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது.

இதனால் பயணம் செய்யும் வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

தற்போது மழை காலம் நெருங்கும் நிலையில் இந்தப் பாலத்தினூடான போக்குவரத்து மிகுந்த ஆபத்துக்குரியதாக மாறியுள்ளது.

எனவே மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இதனை விரைவாக புனரமைப்புச் செய்து தருமாறு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஜ-5)

## எமது நிலங்களை மீட்டுத் தாருங்கள்

### வடக்கு விவசாய அமைச்சரிடம் கோரிக்கை

நில ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தி எமது வாழ்வாதார மேம்பாட்டுக்கு நடவடிக்கை எடுக்குமாறு வட மாகாண விவசாய அமைச்சரிடம் முல்லைத்தீவு மாவட்ட கமக்கார, கால்நடை அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்த வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை விவசாய கால்நடை அமைப்புப் பிரதிநிதிகள் ஒட்டிசுட்டானில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்துவதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் நியாயமான விலை இன்றி நட்டத்தில் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யவேண்டி இருப்பதாகவும் இது குறித்து விவசாய அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

> "மேய்ச்சல் தரவைகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில். கால்நடைகள் உணவின்றி அந்தரிப்பு.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்கென உள்ள மேய்ச்சல் தரவைகளை இராணுவத்தினர் அபகரித்து வைத்திருப்பதாகவும் இதனால் கால் நடைகளுக்கான உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இது குறித்தும் அமைச்சர் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விதை நெல் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றையும் கிராமிய உழவர் சந்தை ஒன்றையும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ஜ-422)

## தேவாலயத்தை சேதப்படுத்திய விசமிகள்

வலி வடக்கு, நவ.5
குப்பிளான் தெற்கில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று இனம் தெரியாதவர்களினால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த தேவாலயம் இந்தாண்டு ஆரம்பத்திலும் இனம் தெரியாதவர்களினால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே தேவாலயம் சேதப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அந்தப் பகுதியைச் சோந்த நான்கு இளைஞர்களை நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு குறிப்பிட்ட கிறிஸ்தவ தேவாலயம் மீண்டும் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் தேவாலயத்தின் அருகில் உள்ள இளைஞர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-86)

# சாரதிகள் 6 பேருக்கு அபராதம் விதிப்பு

தென்மராட்சி, நவ.5
வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிய வாகனச் சாரதிகள் ஆறுபேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் வெள்ளிக்கிழமை மொத்தமாக 61 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.
மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, காப்புறுதி, வாகனவரிப் பத்திரம், சாரதிய அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை வைத்திருக்காதமை தொடர்பாகப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

# மீண்டும் சேவைக்கு தேவரதம் படகு

ஊர்காவற்றுறை- நயினாதீவுசேவையில்ஈடுபட்டதேவரதம் பயணிகள் படகு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, 5 வருடங்களின் பின்னர் விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளது.
ஊர்காவற்றுறையில் இருந்து எழுவைதீவு -அனலைதீவு ஊடாக நயினாதீவு வரை சேவையில் ஈடுபட்ட குறித்த படகு, 2008 ஆம் ஆண்டில் இடம் பெற்ற நிஷா புயலின் போதுசேதத்துக்குஉள்ளானது. குறிப்பிட்ட படகுச் சேவை ஊர்காவற்றுறை பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த நிலையில் திருத்தம் செய்யப்பட்ட குறித்த படகு குத்தகைக்கு வழங்கப்பட்டு சேவையைத் தொடர நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-7)

# நயினாதீவுக்கு இ.போ.ச.பஸ்

யாழ்ப்பாணம், நவ.5
நயினாதீவு உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தவென புதிய இ.போ.ச.பஸ்ஸொன்று இன்று செவ்வாய்க் கிழமை நயினாதீவுக்கு எடுத்து வரப்படவுள்ளது.
நயினாதீவில் சேவையில் உள்ள இ.போ.ச.பஸ் அடிக்கடி பழுதடைவதால் உள்ளூர் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக நயினாதீவு பொது அமைப்புக்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு முறைப்பாடு செய்தன. அதனையடுத்து அமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து புதிய பஸ் அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வடக்குமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கே.கமலேந்திரன், வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா ஆகியோர் புதிய பஸ்ஸை இன்று நயினாதீவில் கையளிக்கவுள்ளனர். (வ-7)

# கொழும்புத்துறையில் புதிய சேமக்காலை

## அமைக்க காணி வழங்கியது அரசு

கொழும்புத்துறை, நவ.5
கொழும்புத்துறைப் பகுதியில் கத்தோலிக்க மக்களை அடக்கம் செய்யும் புதியதொரு சேமக்காலை அமையவுள்ளதாக யாழ். ஆயர் இல்லச் செய்திகள் தெரிவிக்கின்றன.
கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமத்துக்கு அருகில் உள்ள அரச காணி இதற்கென அரசால் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். புனித மரியாள் சேமக்காலையில் இறந்த விசுவாசிகள் தின திருப்பலியை நிறைவேற்றி உரையாற்றும் போது தெரிவித்தார்.
யாழ். மரியாள் சேமக்காலையில் உடலங்களை புதைப்பதற்கு இடநெருக்கடி தோன்றியுள்ளதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
பாஷையூர், கொழும்புத்துறை, எழிலூர், மணியந்தோட்டம், உதயபுரம், வசந்தபுரம், பூம்புகார், அரியாலை பகுதிகளைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள் இந்தப் புதிய சேமக்காலையை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, மாதர்காடு எனப்படும் குறித்த பகுதியில் இந்து சமயத்தைச் சேர்ந்த இறந்த சிறுவர்களைப் புதைக்கும் மயானத்துக்கு ஏற்கனவே இடம் ஒதுக்கப்பட்டுப் பாவனையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (வ-135)



கொழும்புத்துறை வசந்த புரம் கிராமத்துக்கு அருகில் உள்ள அரச காணி இதற்கென அரசால் வழங்கப் பட்டுள்ளது

# பெண்கள், சிறுவர் பிரிவு கட்டடம் திறப்பு இன்று

## புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய வளாகத்தில்

முல்லைத்தீவு, நவ.5
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய வளாகத்தில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் 18 லட்சம் ரூபா செலவில் தனியான பிரிவாக அமைக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுக்கான கட்டடம் இன்று பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வில் அகதிகள் ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கொலம் அப்பாஸ் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க ஸ்ரீவர்த்தன, அகதிகளுக்கான ஐ.நா. தூதரக கிளிநொச்சி பிரிவு தலைமை அலுவலர் மரின் ஜின் ஆகியோரும் கலந்து கொள்வர்.
பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கு இழைக்கப்படும் பாதிப்புக்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்கென தனியான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தனியார் பஸ் கூடுதல் கட்டணம் அறவிட்டால் முறையிடலாம்

## சங்கத்தின் உப தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5
தனியார் பஸ்களில் பஸ் கட்டணங்கள் கூடுதலாக அறவிடப்பட்டால் அது தொடர்பான முறைப்பாட்டை பாதிக்கப்படும் பயணிகள் தமது சங்கத்திடம் மேற்கொள்ளலாம் என்று தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
புதிய பஸ் கட்டண அதிகரிப்பு கடந்த வாரம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், சில்லறைப் பணம் இல்லாததைக் காரணம் காட்டி பஸ் நடத்துநர்கள் கூடுதலான கட்டண அறவீடுகளைப் பயணிகளிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றனர். இதனால் பயணிகள் தனியார் பஸ்கள் மீது அவநம்பிக்கை கொள்வதுடன் நடத்துநர்களுடன் முரண்பட வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.
7 வீத பஸ் கட்டண அதிகரிப்பின்படி உள்ளூர் பஸ்களுக்குப் பெரிதளவில் கட்டணவேறுபாடுகள் இல்லை. எனினும், வெளிமாவட்ட பஸ்களுக்கு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

### புதிய பஸ் கட்டண பட்டியல் பார்வைக்கு

புதிய பஸ் கட்டண பட்டியல் அந்தந்த சேவை பஸ்களில் காட்சிக்கு ஒட்டப்பட்டுள்ளன. இதனை மீறி கூடுதலான கட்டணத்தை அறவிடும் நடத்துநர்கள் தொடர்பான தகவலைப் பாதிக்கப்படுகின்ற பயணிகள் தனியார் பஸ் சங்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு தெரிவிக்கலாம்.
021-222-6924 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் தகவல் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (ஒ-14)



சில்லறைப் பணம் இல்லாததைக் காரணம் காட்டி பஸ் நடத்துநர்கள் கூடுதலான கட்டண அற வீடுகளை பயணிகளிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

# ஆமை வேகத்தில் மாடிக் கட்டடப் பணி



கொடிகாமம், நவ.5
வரணி மகாவித்தியாலயத்தில் இசுறு பாடசாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் மாடிக்கட்டடம் ஒன்றின் கட்டுமானப் பணிகள் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருவதாக பெற்றோர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.
குறித்த பாடசாலைக்கான மாடிக்கட்டடங்கள் இரண்டுக்கு கல்வி அமைச்சால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் ஏற்கனவே ஒரு மாடிக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநரால் இந்தக் கட்டடங்கள் சார்பில் ஏற்கனவே அடிக்கல் நடப்பட்டது.
குடாநாட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் குறித்த காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வேறு பாடசாலைகள் சிலவற்றின் கட்டுமானப் பணிகள் நிறைவுற்று திறப்பு விழாக்களும் இடம்பெற்று முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

# மக்களின் கனவுகளை அமைச்சர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அறிவுரை

வடமாகாணத்தில் வாழ்கின்ற மக்கள் ஒவ்வொருவரினதும் கனவுகளைக் கவனத்தில் கொண்டு மாகாண சபை அமைச்சர்கள் செயற்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.
வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு மன்னார் மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினரால் வரவேற்பு நிகழ்வொன்று நடத்தப்பட்டது.
பனங்கட்டிக்கொட்டு கிழக்கில் அமைந்துள்ள சங்க மண்டபத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாணத்தில் வாழும் ஒவ்வொரு மக்களதும் கனவுகளை அமைச்சர்கள் கவனத்தில்கொண்டுசெயற்படவேண்டும். மன்னார் மண்ணில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது அமைச்சர் என்ற வகையில் மக்களின் அபிலாசைகளை அவரது அமைச்சின் ஊடாக முடிந்தளவுக்கு அவர் திறம்படச் செயற்படுத்துவார் என்று நம்பிக்கை இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-5)



## பிரதமர் பங்கேற்றால் கறுப்புக்கொடி போராட்டம் எச்சரிக்கிறார் வீரமணி

சென்னை, நவ.5

இலங்கையில் நடை பெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ள முடிவெடுத்தால் வீடுகளில் கறுப்பு கொடிஏற்றிபோராட்டம் நடத்துவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:- பிரதமரோ இந்திய அரசோ இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று ஒரே குரலாக, தமிழ்நாட்டில் டெசோ உட்பட பலரும் பல கட்சிகள்- சட்டத்தரணிகள், விவசாயிகள், மாணவர்கள் முதலிய அனைத்துத்தரப்பினரும் பல்வகைப் போராட்டங்களையும் நடத்திய வண்ணமே உள்ளனர்.

தமிழ்நாடு சட்ட சபையில், ஒட்டு மொத்தமாக தமிழ் நாட்டின் குரல்- கோரிக்கை இது தான் என்று உணர்த்தும் வண்ணம் முதலமைச்சரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் வரவேற்கப் பட்டுள்ளது.

அவற்றையெல்லாம் மீறி பிரதமர் கலந்து கொள்ள முடிவு எடுத்தால், தமிழ் நாட்டுத் தமிழர்களாகிய நாம் எமது எதிர்ப்பை அறவழியில் காட்டியாக வேண்டும். அவரவர் இல்லங்களில் இடங்களில் கறுப்புக் கொடிகளை அந்த நாள் களில் (நவம்பர் 15-17) பறக்க விட்டு எமது துயரத்தை, எதிர்ப்பை, கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். என்றுள்ளது.

(வ)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரமேஸ்வரி கோபாலசிங்கம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கோபாலசிங்கம் நேற்று (04.11.2013) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம்- காயம்மா தம்பதியரின் அன்பு மகளும் கோபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் நாகலிங்கம் -வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் ஆனந்தகிருஷ்ணன், கிருஷ்ணவேணி, கிருஷ்ணஜோதி, கிருஷ்ண குமாரி, கிருஷ்ண லதா,கிருஷ்ணமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி, உபாலி, நடேயவரன், யேசுதாசன், நவீனன், அட்றின் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2013) செவ்வாய்க்கிழமை தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

377 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்

### அமிர்தலிங்கம் கண்ணதாசன்(அப்பன்)



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 58, சீனிவாசகம் றோட்டை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் கண்ணதாசன் நேற்றுமுன்தினம் (03.11. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமிர்தலிங்கம் செங்கமலம் தம்பதியரின் அன்பு மகனும், தர்சினியின் அன்புக் கணவரும், விதுர்சனின் பாசமிகு தந்தையும், மலர்மதி, பூமதி, நித்தியானந்தன் (தம்பி- தேநீர்ச்சோலை), சுமதி, கருணா நிதி (பிரபு), தீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரஞ்சோதி, மோகன், திருச்செல்வம் (திரு) கல்பனா, லக்சனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (05.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 58, சீனிவாசகம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6365813

(39739.14.17)

### கனகலிங்கம் சிவலிங்கம் (லிங்கம்)

கிளாலியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாக வும் கொண்ட கனகலிங்கம் சிவலிங்கம் நேற்று முன்தினம் (03.11. 2013) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவராசா-தங்கராணி தம்பதியரின் அன்பு மருமகனும், மிதிலைச்செல்வியின் அன்புக் கணவரும், சத்தியதாஸ் (மலேசியா), சுஜிதரன், சுஜிகரன், மீருகன், வினித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ,ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2013) செவ்வாய்க் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6A, 4ஆம் குறுக்குத் தெரு
கொழும்புத்துரை.

தகவல்:
குடும்பத்தினர்.

விராட் விஸ்வப்பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் நாகமணி

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகமணி நேற்று (04.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-மாணிக்கம் தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதிரயின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகம்மா, தம்பியையா, ஆச்சிமுத்து, அன்னபூரணம், சரவணமுத்து, சிங்கராசா ஆகியோரின் சகோதரனும், தவராணி, சிவராணி, தவேந்திரராசா (ஆசிரியர், யா/ உயரப்புலம் மெ.மி.த.க.), சிவகுமார், கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகராசா, பிலிப், ஜெயகௌரி, அனுசா, குகதாஸ் ஆகியோரின் மாமனும், சங்கவி, யோகீசன், சாமிலி, முகுந்தன், தனுசன், நிதுர்சனா, அனோஜா, பானுஷா, ஜதுஷா, சபரீசன், மனோஜ், சுபாங்கி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2013) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் தகனத்துக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடி லேன், திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். 077 3538419

தகவல்:
குடும்பத்தினர்.

## தமிழகத்தில் இலங்கை அகதி முகாம் அருகே மோதல்

### 15 பேர் காயம்

சென்னை, நவ.5

தமிழகத்தில் புதுப்பட்டிகிராம மக்களுக்கும் அதற்கு அருகில் உள்ள இலங்கை அகதி முகாம் இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல், கல்வீச்சில் 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள புதுப்பட்டி கிராமத்தை அண்மித்த பகுதியில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இந்த முகாமை ஒட்டி பத்ரகாளியம்மன் கோயில் உள்ளது. அகதி இளைஞர்கள் சிலர் மது அருந்திவிட்டு போத்தல்களை கோயில் அருகே வீசியுள்ளனர்.

இதனால் புதுப்பட்டியை சேர்ந்த இளைஞர்களுக்கும் இலங்கை அகதி முகாம் இளைஞர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்தத் தகராறு முற்றி ஒருவருக்கு ஒருவர் தாக்கிக் கொண்டனர். இரு பகுதியிலும் பல்வேறு வதந்திகள் பரவின.

அதையடுத்து கலவரம் மூண்டது. ஒணான்கரட்டு அடிவாரத்தில் அகதிகள் முகாம் இருப்பதால், கரட்டில் நின்று மர்ம ஆசாமிகள் முகாம் மீது கற்களை சரமாரியாக வீசினராம்.

அதனையடுத்து புதுப்பட்டி பகுதி மக்கள் மீது இலங்கை அகதிகள் கற்களை வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கல்வீச்சில் புதுபட்டியைச் சேர்ந்த காளியம்மாள், வேலம்மாள், ஜோதி முத்து, தமிழரசி, பிரபு, நாகாத்தா, கருப்பையா , ஹரிகரன், ராசம்மா ஆகியோர் காயம் அடைந்து வத்தலகுண்டு அரசு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த சுதாகர், ரமேஷ், ராஜ்குமார், நிஷாந்த், ஜெயபாஸ் , அமலதாஸ், பிரின்ஸ்மேரி ஆகியோர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் நிலக்கோட்டை அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதனையடுத்து புதுப்பட்டி, இலங்கை அகதிகள் முகாமில் பொலிஸார் குவிக்கப் பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வத்தல குண்டு பொலிஸ் நிலையத் தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## இசைப்பிரியா படுகொலை

### ஜெயந்தி நடராஜன் கண்டனம்

இசைப்பிரியா படுகொலைக்கு இந்திய மத்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் டில்லி செல்வதற்காக சென்னை விமான நிலையம் வந்தார். அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

*கேள்வி:* பொதுநலவா மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்கிறாரா?

*பதில்:* அந்த மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வது பற்றி நல்ல முடிவு எடுப்பார். அவர் கலந்து கொள்ளக் கூடாது என்று தொடர்ந்து நான் வலியுறுத்தி வருகிறேன். கடித மூலமாகவும் தெரிவித்துள்ளேன். தமிழ் மக்களின் உணர் வுகளை அறிந்து பிரதமர் நல்ல முடிவு எடுப்பார்.

*கேள்வி:* இசைப்பிரியா கொல்லப்பட்ட ஆவணப் படம் பார்த்தீர்களா?

*பதில்:* ஆவணப் படத்தை ஊடகங்கள் மூலமும் பத்திரிகை மூலமும் அறிந்து கொண்டேன். அந்த காட்சிகளை பார்க்கவே முடியாது. அந்த அளவுக்கு பயங்கரமாக உள்ளது. இதை வன்மையாக கண்டிக்கிறேன்-என்றார்.

(வ)

## மரண அறிவித்தல்கள்



### வல்லிபுரம் நடராசா

கரவெட்டி கிழக்குத் தொடுத்தனையைப் பிறப்பிடமாகவும், இந்தியா சென்னை வளசர வாக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராசா கடந்த (01.11.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா வல்லிபுரம்-பத்தினி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் சுப்பையா- மினாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராதேவியின்(லண்டன்) அன்புக் கணவரும், நளினி(லண்டன்), நகிந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மலர்விழி மற்றும் நவநேசன் (பிரான்ஸ்), உமாஜினி (லண்டன்), நவஜீவன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜ்குமாரின் அன்பு மாமனும், கனகசபை (இலங்கை), காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, கிட்ணபிள்ளை (லண்டன்), வள்ளிப்பிள்ளை (இலங் கை), தங்கவேலு (இலங்கை), ஜீவரட்ணம் (இலங்கை), சிவசுப்பிர மணியம் (நோர்வே), காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெனோசன் (லண்டன்), லக்சி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2013) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
பிரித்தானியா :- தொலைபேசி: +442083030769, செல்லிடப்பேசி:- +44 7762349965
பிரான்ஸ்:- தொலைபேசி +33753718848, செல்லிடப்பேசி:- +33753226509
இந்தியா:- செல்லிடப்பேசி- +919940291700

தகவல்:
குடும்பத்தினர்.

### சுவாம்பிள்ளை பேனாட் ஸூசியன் (ஓய்வு பெற்ற விகிதர்)



ஊர்காவற்றுறை மேற்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை பேனாட் லூசியன் நேற்றுமுன்தினம் (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை-புதுமைமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற இருதயதாசன், சுகிர்தமலர், அன்ரனி பேர்னாட்டோ, அனற்ராசியா (அதிபர் சரவணை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யூலியற், றஞ்சினி (ஆசிரியை, நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்), சாந்தினி ஆகியோரின் மைத்துனரும், மரியவியானியின் சகலனும், செபமாலைமுத்தின் அன்புக் கணவரும், சுதர்சினி (ஆசிரியை, குருநாகல்), சுபோதினி (சேவா லங்கா யாழ்ப்பாணம்), மேர்சி சுஜந்தினி (பிரதேச செயலகம் காரைநகர்), யேசுநேசன்(மாவட்ட நீதி மன்றம் சாவகச்சேரி), றோய்சி, கமலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், றெஜினோல்ட் கிளமன்ட் (ஆசிரியர்) மனோகரன் (பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனும், கரோலின் செரின், சில்வெஸ்ரர், கெவின் பிற்றர்ஸன், எறிக் ஹணீஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (06.11.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சுயதொழில் உதவிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ.5
வடமராட்சி கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐந்து பேருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் அனுசரணையுடன் பய னாளிகளுக்கு தலா 35 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

பின்வரும் பயனாளிகளை எதிர்வரும் 8 ஆம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு வருகை தருமாறு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

சா.மகாதேவன், கரவெட்டி மேற்கு. ஆ.பரமநாதன், அல்வாய் தெற்கு. கே.ஜெயசீலன், நெல்லியடி. தி. அபிராமி அல்வாய் கிழக்கு. ஜெ. யோகநந்தினி, கரணவாய் தெற்கு. (வ-9)

## முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள்

அச்சுவேலி, நவ.5
இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் பாலர் முன்பள்ளி மாணவர்களின் பயன்பாட்டுக்கென 60 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்கள் மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் நலன் அபிவிருத்தி அமைச்சின் மில்லியன் நூறு வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. (வ-11)

## உபகரணத் தொகுதிக்கு நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி, நவ.5
புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதி மூலம் 'பாண்ட்' வாத்திய கருவி சாதனங்கள் கொள்வனவுக்காக ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஒலிபெருக்கி சாதனங்கள் கொள்வனவுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

குறித்த நிதி மூலம் 'பாண்ட்' வாத்திய கருவியும் ஒலிபெருக்கிச் சாதனங்களும் பாடசாலை நிர்வாகத்தால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (வ-11)

# இரும்பின் விலைக்கு விற்கப்பட்ட பாரவூர்திகள்

### அவற்றைத் தேடுவாரில்லாத காரணத்தால்


வலி.வடக்கு, நவ.5
யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்ட முந்நூறுக்கும் மேற்பட்ட பாரவூர்திகள் தொழில் இன்மையால் உரிமையாளர்களால் இரும்பு விலைக்கு விற்கப்பட்டதாக யாழ்.மாவட்ட பாரவூர்திகள் சங்கத்தின் தலைவர் எஸ்.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பாரவூர்திகள் சங்கத்தில் நேற்று பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார். கடந்த காலங்களில் எமது பாரவூர்திகள் ஒப்பந்த அடிப்படையில் செயற்பட்டு வந்தன.

குறிப்பாக காங்கேசன் துறை பருத்தித்துறை துறை முகங்களில் கப்பலில் பொருள்கள் கொண்டு வந்து இறக்கப்பட்ட வேளையில் சகல பாரவூர்திகளும் சேவையில் ஈடுபட்டன.

அதனைத் தொடர்ந்து மகேஸ்வரி நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் மணல் ஏற்றும் சேவைக்கான பணியில் எமது பாரவூர்திகள் ஈடுபட்டன. தற்போது அவர்களும் எம்முடன் மேற்கொண்ட புரிந்துணர்வுச் செயற்பாடுகளை மீறி தாம் கொள்வனவு செய்த 'டிப்பர்' வாகனங்களை மணல் ஏற்றப் பயன்படுத்துவதால் எமக்கு அங்கும் சேவையில் ஈடுபட இயலாது போயுள்ளது.

இதனால் பாரவூர்திகள் சேவையில் ஈடுபடாத நிலையில் பாரவூர்திகள் பழுதடைந்தமையால் அவற்றை இரும்பு விலைக்கு உரிமையாளர்கள் விற்றுத் தொழிலை இழந்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (வ-86)



# 'அனந்தம்' நூல் வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.5
நாடகக் கலைஞர் நா. அனந்தராஜனின் கலைச் சேவையைப் பாராட்டி அல்வாய் நாடக கலைமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'அனந்தம்' என்னும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

இளைப்பாறிய அதிபர் செ. சதானந்தன் தலைமை யில் நடைபெற்ற நிகழ் வுக்கு முதன்மை விருந்தினராக பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் கலந்து கொண்டார்.

நூலின் முதல் பிரதியை முதன்மை விருந்தினரிடமிருந்து ஓய்வுநிலை ஆசிரியர் க. கந்தசுவாமியும் சிறப்புப் பிரதியை ந.கிருஷ்ணானந்தனும் பெற்றுக் கொண்டனர். (வ-9)




தியாகி அறக்கொடை நிறுவனத்தின் கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்விப் புலமைப்பரிசில் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (எ)

### இயந்திர இணைப்பின்றி தொழில் செய்யும்

# மீனவருக்கு மானியமும் உபகரண உதவியும் இல்லை



கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு மானிய மண்ணெண்ணெய் விநியோகத்துக்குப் பதிலாக கடற்றொழில் உபகரணங்கள் வழங்குவது தொடர்பில் கடற்றொழில் அமைச்சு விடுத்த அறிவிப்பால் இயந்திர இணைப்பில்லாத படகுகளை வைத்திருப்போர் விசனமடைந்துள்ளனர்.

இவ்வாறு இயந்திர இணைப்பில்லாத படகுகளின் மூலம் கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு எந்த வொரு மானியமும் கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பட வில்லை. தற்போதைய திட்டத்தின் பிரகாரம் குறித்த தொழிலாளர்களுக்கு உப கரணங்கள் வழங்குவதில் புறக்கணிப்பு இடம்பெறுமென கூறப்படுகிறது.

இதேவேளை வன்னிப் பகுதியிலிருந்து தமது சொந்த இடங்களில் மீளக்குடிய மர்ந்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு அமைச்சால் இதுவரை எந்தவொரு உதவியும் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (வ-9)

# நெல்லியடிச் சந்தியில் போதையில் அட்டகாசம்

**தீபாவளி தினத்தன்று**

பருத்தித்துறை, நவ.5
நெல்லியடிச் சந்தியில் தீபாவளி தினத்தன்று மதுபோதையில் நின்ற இளைஞர்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

நெல்லியடிச் சந்தியில் அமைந்துள்ள மதுபானக் கடைகளில் மது அருந்தி விட்டு தகாத வார்த்தைகளால் உரத்துச் சத்தம் போட்டனர். இதனால் அந்தப் பகுதியூடாகப் பயணம் செய்த பொதுமக்கள் அச்சத்துடன் செல்ல நேர்ந்ததுடன் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாகினர்.

இதனைவிட மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் வீதியோரத்தில் விழுந்த போது வீதியில் சென்ற பொதுமகன் ஒருவர் அவருக்கு உதவ முயன்ற வேளை அவ்விடத்தில் மதுபோதையில் நின்ற சக இளைஞர்கள் அவருடன் முரண்பட்டனர்.

நெல்லியடிப் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது, ஓடி ஒளிந்து விட்டுப் பின்னர் மீண்டும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர் என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே பண்டிகைக் காலங்களில் மது அருந்திவிட்டு அட்டகாசத்தில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)

# கவனிப்பாரற்ற நிலையில் சிட்டிவேரம் - மிருசுவில் வீதி

வரணி, நவ.5
சிட்டிவேரம்- மிருசுவில் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சிட்டிவேரம் அம்மன் ஆலய முன்றிலில் இருந்து நாவற்காடு, குடமியன், மிருசுவில் வரையான வீதியே இவ்வாறு காணப்படுகிறது.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, வரணி மகா வித்தியாலயம், உசன் மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு அ.த.க. பாடசாலை ஆகிய பாடாலைகளுக்குச் செல்வதற்கு மாணவர்களும் ஆசிரியர்களும் இவ்வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது மழை காலம் ஆரம்பமாகியுள்ளதையடுத்து குழிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் இவ்வீதியால் பயணம் செய்யும் மாணவர்கள் உட்பட அனைவரும் ஆடைகளில் சேற்றுக்கறையுடன் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வீதிகளில் மின்சார விளக்குகள் பொருத்தப்படாததால் இரவு நேரங்களில் போக்குவரத்தை மேற்கொள்வோர் அடிக்கடி விபத்துக்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே குறித்த வீதியில் போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளின் நலன் கருதி அதைப் புனரமைப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-400-35)

## அசாமில் துப்பாக்கிச் சூடு: 7 பேர் சாவு



கோல்பரா, நவ.5

இந்தியாவின் அஸ்ஸாமில் தீபாவளிக் கொண்டாட்டத்தின்போது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். கோல்பரா மாவட்டத்தில் ஜென்டாமரை என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் 9 மணியளவில் மக்கள் தீபாவளி கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களைத் திடீரெனச் சுற்றி வளைத்த தீவிரவாதிகள் அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் சம்பவ இடத்திலேயே 6 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த மேலும் 7 பேர், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

## இன்று இந்தியாவின் 'செவ்வாய்' பயணம்

சென்னை, நவ.5

மங்கள்யான் விண்கலம் செவ்வாய் கிரகத்தை நோக்கித் தனது பயணத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளது. பி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் செலுத்தப்படவுள்ள மங்கள்யான் விண்கலம் செவ்வாய் கிரகத் தரையின் மேற்பரப்பு குறித்தும், அங்கு மீத்தேன் வாயு உற்பத்தி ஆகும் இடம் குறித்தும் ஆய்வு செய்யவுள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் சதிஸ்தவான் ரொக்கெட் தளத்தில் இருந்து இன்று பிற்பகல் 2.36 மணிக்கு இந்த விண்கலம் விண்ணுக்குச் செலுத்தப்படவுள்ளது. அதற்கான ஆயத்தப் பணிகள் அனைத்தும் முடிந்து விட்டன என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## மூன்று நாள்களில் ரூ.330 கோடி!

### தமிழக 'குடி' மக்களின் சாதனை இது

சென்னை, நவ.5

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, 3 நாள்களில் மட்டும் தமிழக அரச மதுபான விற்பனை நிலையங்களில் ரூபா.330 கோடிக்கு (இந்திய நாணய மதிப்பு) விற்பனை நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இது கடந்த ஆண்டை விட ரூபா 80 கோடி அதிகமாகும்.

கடந்த 1ஆம் திகதி முதல் 3ஆம் திகதி வரை 3 நாள்களில் மட்டும் அரச மதுபான விற்பனை நிலையங்களில் ரூபா 330 கோடிக்கு மேல் மதுவகைகள் விற்பனையாகி உள்ளன. அதில் சென்னையில் மட்டும் சுமார் ரூபா 43 கோடி ரூபாவுக்கு மது விற்பனையாகி உள்ளது. தீபாவளிப் பண்டிகை அன்று மட்டும் அரச மதுபான விற்பனை நிலையங்களில் ரூபா 150 கோடிக்கு மதுபானம் விற்பனையாகியுள்ளதுஎன்றும் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது, தமிழகத்தில் ரூபா 250 கோடிக்கு மது விற்பனையாகி இருந்தது. அதன்படி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மது விற்பனையை 80 கோடி ரூபாவால் அதிகரித்து தமிழக 'குடி' மக்கள் சாதனை புரிந்துள்ளனர். (ற)

## தெலுங்கானா பிரச்சினையால் திணறுகிறது காங்கிரஸ்

ஐதராபாத், நவ.5

தெலுங்கானா தனி மாநிலமாக்கப்படும் என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ள போதும், அது விடயத்தில் தமது கட்சிகளுக்குள் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த முடியாது காங்கிரஸ் மற்றும் தெலுங்கு தேசம் ஆகிய கட்சிகள் திணறி வருகின்றன. தனித் தெலுங்கானாவுக்கு ஆதரவு உள்ளது போன்று எதிர்ப்பும் உள்ளது. ஆந்திராவைத் துண்டாடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சீமந்திரா, கடலோர ஆந்திரா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்தநிலையில், தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து கருத்துத் தெரிவிக்கும்படி ஆந்திராவைச் சேர்ந்த எட்டு முக்கிய அரசியல் கட்சிகளிடம் இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் கருத்துகேட்டிருந்தது. ஆனால் ஆந்திராவின் ஆளும் கட்சியான காங்கிரஸால் அது விடயத்தில் தமது உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்த முடியவில்லை. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இரு அணிகள் காணப்படுகின்றன. அதையடுத்து மத்திய அரசிடம் என்ன கூறுவது என்று தெரியாது ஆந்திர மாநில காங்கிரஸ் திணறி வருகின்றது. அதேபோல், தெலுங்கு தேசம் கட்சியிலும் தெலுங்கானாவுக்கு ஆதரவாகவும், எதிராகவும், தனித் தனி அணிகள் உருவாகியுள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

# தமிழரின் உணர்வுகளை மதித்து பிரதமர் முடிவெடுக்க வேண்டும்

## பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து மத்திய அமைச்சர் ஏ.கே.அந்தோனி வலியுறுத்து

புதுடில்லி, நவ.5

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக முடிவெடுக்கும்போது தமிழ்மக்களின் உணர்வு களை மதித்துச் செயற்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந் தோனி.



இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தமிழகத்தின் பல்வேறு கட்சிகள் கூட்டாக வலியுறுத்தி வருகின்றன. அது தொடர்பான தீர்மானமும் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தநிலையில் ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சரான ஏ.கே. அந்தோனியும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்ற சாரப்படக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும் என்று தமிழக மக்களின் ஏகோபித்த கோரிக்கையாக உள்ளது. எனவே இந்த விடயம் குறித்துப் பிரதமர் மன்மோகன் சிங் முடிவெடுக்கும்போது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முடிவெடுக்க வேண்டும்." என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நிதியமைச்சர் ப.சிதம்பரம், கப்பல் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் ஆகியோர் இந்தியா பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தியிருந்தனர். தற்போது மற்றொரு முக்கிய அமைச்சரான ஏ.கே. அந்தோனியும்அதேகருத்தை வலியுறுத்தியுள்ளார். (ற)



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந்திய – பாகிஸ்தான் எல்லையில் இரு நாட்டு இராணுவத்தினரும் இனிப்புகளைப் பரிமாறிக் கொண்டனர். இரு நாட்டு எல்லைப் பகுதியில் பதற்றம் நிலவி வரும் நிலையில் ஓர் நல்லெண்ண முயற்சியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற)

## கருத்துக் கணிப்பை தடை செய்யுங்கள்

### காங்கிரஸ் கட்சி கோரிக்கை

புதுடில்லி, நவ.5

தேர்தல் காலத்தில் கருத்துக் கணிப்புகள் நடத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.



ராஜஸ்தான், டெல்லி, மத்திய பிரதேசம், சத்திஸ்கர், மிசோரம் ஆகிய 5 மாநிலங்களில் சட்டசபைதேர்தல்கள் விரைவில் நடைபெற உள்ளன. அவை குறித்து அண்மையில் கருத்து கணிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்திஸ்கர் ஆகிய 3 மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிக்கும் என்றும், புதுடில்லியில் அதிக தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றும் எனவும் அந்தக் கருத்துக் கணிப்பின் முடிவுகள் தெரிவித்தன.

அதையடுத்தே காங்கிரஸ் கட்சி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. இதுகுறித்து அந்தக் கட்சி தேர்தல் ஆணையத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

"தேர்தல் நேரத்தில் நடைபெறும், கருத்துக் கணிப்பு சரியானதாக இருக்காது. எனவே தேர்தல் காலத்தில் கருத்துக் கணிப்பு நடத்துவதற்கு தடை விதிக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## விளக்கமளிப்பதற்கு கால அவகாசம் வேண்டும்

### தேர்தல் ஆணையத்திடம் ராகுல் காந்தி கோரிக்கை

புதுடில்லி, நவ.5

தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறினார் என்று பா.ஜனதா அளித்த முறைப்பாடு குறித்து விளக்கமளிப்பதற்கு 7 நாள்கள் கால அவகாசம் தேவை என்று இந்தியத் தேர்தல் ஆணைத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட ராகுல் காந்தி, முஷாபர்நகர் கலவரத்திற்கு பின்னர், அங்குள்ள இஸ்லாமிய இளைஞர்களை பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ். ஐ. தொடர்பு கொண்டதாக கூறியிருந்தார். ராகுலின் இந்த பேச்சு தேர்தல் நடத்தை விதிகளுக்கு மாறானது எனக்கூறி, தேர்தல் ஆணையத்தில் பா.ஜனதா முறைப்பாடு செய்திருந்தது. அதையடுத்து அதுகுறித்து விளக்கமளிக்க வேண்டும் என்று ராகுல் காந்தியிடம் தேர்தல் ஆணையம் கேட்டிருந்தது. (ற)

## மாணவர் விசாவில் தளர்வுகள்

### ஆஸ்திரேலியா அறிவிப்பு

மெல்பேர்ன், நவ.5

வெளிநாட்டு மாணவர்களைக் கவரும் விதமாக தனது விசா நடைமுறைகளை எளிதாக்கத் திட்டமிட்டுள்ளது ஆஸ்திரேலியா.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் குறிப்பாக ஆசிய நாடுகளில் இருந்து அதிகளவிலான மாணவர்கள் மேற்படிப்புக்காக ஆஸ்திரேலியா செல்கின்றனர். எனினும் இடம்பெற்ற சில வன்முறைச் சம்பவங்களை அடுத்து ஆஸ்திரேலியா மாணவர் விசாவில் கடுமையான விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. அதையடுத்து ஆசிய நாடுகளில் இருந்து மேற்படிப்புக்கான வரும் மாணவர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதுடன், ஆஸி. கல்வித் துறையின் வருவாயும் பெரிதும் குறைவடைந்தது.

அதனையடுத்து வெளிநாட்டு மாணவர்களைக் கவரவிஸாநடைமுறையை எளிமைப்படுத்த தற்போதைய அரசு திட்டமிட்டுள்ளது. வெளிநாட்டு மாணவர்களின் வங்கிக் கணக்கில் குறைந்த பட்சம் 10 லட்சம் ரூபா கணக்கு இருக்க வேண்டும் என்ற முந்தைய விசா நடைமுறை விரைவில் தளர்த்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற)



பொலிவியாவில் நேற்றுமுன்தினம் சிறிய ரக பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்தனர்.9 பேர் கயமடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விமானத்தில் பயணித்தவர்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியாத நிலையில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

## ஜோர்ஜியாவின் புதிய பிரதமர் கரிபாஷ்விலி



அற்லன்றா, நவ.5

ஜோர்ஜியாவின் புதிய பிரதமராக 31 வயதான இராக்லி கரிபாஷ்விலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் சோவியத் யூனியன் நாடான ஜோர்ஜியாவின் பிரதமராக பதவி வகித்த பிட்ஸினா இவானிஷ்விலியின் பதவிக்காலம் இந்த மாத இறுதியில் முடிவடைகிறது. அதையடுத்தே கரிபாஷ்விலி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் 24 ஆம் திகதி பிரதமராகப் பதவியேற்கவுள்ளார். (ற)

# சதி செய்கிறது அமெ.

## குற்றஞ்சாட்டுகின்றார் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர்

லாகூர், நவ.5

பாகிஸ்தானுக்கும் தலிபான்களுக்கும் இடையே நடந்துவரும் அமைதிப் பேச்சுகளைச் சீர்குலைக்கும் நோக்கிலேயே அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதல்களை மேற்கொள்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் செளத்ரி நிஸார் அலி கான்.

அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதலில் பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவர் ஹகிமுல்லா மசூத் உயிரிழந்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறும்போது,

"பாகிஸ்தான் அரசு தலிபான்களுடன் மேற்கொள்ளும் அமைதிப் பேச்சுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதலில் ஈடுபடாது என்று அமெரிக்க தூதர் ஓல்சன் என்னிடம் கடந்த சனிக்கிழமை உறுதியளித்தார். ஆனால் அதற்குள் ஹகிமுல்லா கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தால் தலிபான்களுடன் அமைதிப் பேச்சுகளை மேற்கொள்வதில் பின்னடைவு ஏற்படும். அமைதிப் பேச்சுகளை சீர் குலைக்கும் நோக்குடனேயே அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது." என்று தெரிவித்துள்ளார். (ற)

## முன்னறிவிப்பு ஏதுமின்றி எகிப்துக்குப் பறந்தார் கெரி



கெய்ரோ, நவ.5

அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஜோன் கெரி எகிப்துக்கு முன்னறிவிப்பு அற்ற பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா மற்றும் வட ஆபிரிக்க நாடுகளுக்கான ஒன்பது நாள் உத்தியோகபூர்வப் பயணத்தின் முதல் கட்டமாக ஜோன் கெரி கெய்ரோவைச் சென்றடைந்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் பதவி கவிழக்கப்பட்ட மொஹமட் மூர்சிக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நேற்றையதினம் நடைபெற்ற நிலையில் கெரியின் இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது.

நாட்டின் அரசியல் அதிகார மாற்றம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள இருதரப்பு உறவுகள் குறித்து இராணுவ பின்புலத்துடனான எகிப்து அரசுடன் கெரி பேச்சு நடத்தவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை கெரியின் திடீர்ப் பயணம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்கஅதிகாரிகள்மொஹமட் மூர்சியின் வழக்கு விசாரணைக்கும் ஜோன் கெரியின் பயணத்துக்கும் எந்த விதத் தொடர்புகளும் இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

மொஹமட் மூர்சி பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் எகிப்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளன. முஸ்லிம் சகோதரத்துவ கட்சி மற்றும் அதன் ஆதரவாளர்களை அடக்கும்செயற்பாடுகளை இடைக்கால உள்விவகார அமைச்சு கட்டுப்படுத்த வேண்டுமென அமெரிக்கா அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது.(ற)



*தாய்லாந்தில் நடைபெற்ற உலக திருநங்கைகள் அழகுப் போட்டியில் பிரேசில் நாட்டை சேர்ந்த மார்கெலோ ஓஹியா (18) அழகு ராணியாக முடிசூட்டப்பட்டார். உலக அழகி போட்டி போன்றே சில ஆண்டுகளாக திருநங்கையர்களுக்கான உலக அழகு ராணி போட்டியும் நடைபெற்று வருகிறது. தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் 9 ஆவது உலக திருநங்கையர் அழகு ராணி போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் 16 நாடுகளைச் சேர்ந்த திருநங்கைகள் பங்கேற்றனர். முக வசீகரம், அறிவுக் கூர்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஓஹியா அழகியாகத் தெரிவு செய்யப்பட்டார். (ற)*

## தனியார் திரையரங்குக்கு கியூபாவில் திடீர் தடை

நியூயோர்க், நவ.5

அமெரிக்கத் திரைப்படங்களைத் திரையிட்டதன் காரணமாக தனியார் திரையரங்குகளுக்குத் தடைவிதித்துள்ளது கியூபா.

அமெரிக்காவின் பரம எதிரியும், கம்யூனிஸ்ட் நாடொன்றுமான கியூபாவை, 2008 ஆம்ஆண்டு வரையிடல்காஸ்ட்ரோஆட்சி செய்து வந்தார். அதன்பின்னர் தனது உடல் நிலை மோசமானதை அடுத்து அவர் தமது தம்பி ரவுல் காஸ்ட்ரோவிடம் ஆட்சியை ஒப்படைத்தார்.

ரவுல் காஸ்ட்ரோ ஆட்சிக்கு வந்தவுடன், தனியார் மயத்துக்கு இடமளித்தார். விடுதிகள் நடத்தவும், பொழுது போக்கு அம்ச அரங்கங்களை நடத்தவும் அனுமதியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## நெரிசலில் 17 பேர் சாவு

### நைஜீரியாவில் பரிதாபம்

நிகோபார், நவ.5

நைஜீரியாவின் நிகேபார் நகரில் நடந்த டொமினிக் கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார்கள் தின விழாவில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

நெரிசலில் சிக்கி 50க்கும் அதிகமானவர்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அவர்களில்பலரின்நிலைமை மோசமாக இருப்பதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும் என்று மருத்துவ மனை வட்டாரங்கள் கூறுகின்றன. (ற)

## வரவு-செலவு திட்டம்: ஆதரவு கோருகிறார் ஒபாமா

நியூயோர்க், நவ.5

புதிதாக சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

அமெரிக்க மக்களுக்கான அவரது வாராந்த உரையின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும் போது,



"உற்பத்தி நெருக்கடியைப் போக்கவும்,நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவும் நாடாளுமன்றத்தில்புதிய வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்ய இருகட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும். நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது நம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும்தான்.

சில ஆண்டுகளாக எமது நாட்டின் உற்பத்தித் திறன் நெருக்கடி நிலையைச் சந்தித்து வருகிறது. ஜனநாயக கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து, புதிய வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்ய ஒத்துழைக்க வேண்டும்." என்று கூறினார். (ற)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கு, கிழக்குக்கு வழங்குங்கள்

## முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் தெரிவிப்பு

அம்பாறை, நவ.5

"சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வின் மூலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட சிறப்பு அதிகாரங்களை வழங்க அரசு முன்வர வேண்டும்."

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும், முன்னாள் இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் 65 ஆவது பிறந்த தின நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1978 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே கொண்டு வரப்பட்டது.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழ் பேசும் மக்களுக்குத் தான் எதையும் பெரிதாகக் கொடுக்கவில்லையென்று சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில், மாகாண சபை முறையை நாட்டின் சகல மாகாணங்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

தந்தை செல்வா தொடக்கம் தமிழரசுக் கட்சித் தலைவர் சம்பந்தன் வரை தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை முன்னெடுத்துச் செல்வது போல எமது தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பால் முன் வைக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் தாயக உரிமைகளை வென்றெடுக்கும் பயணத்தில் இன்று தலைவர் ர்வூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இதனடிப்படையில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கோ அல்லது அதிலுள்ள சரத்துக்களை நீக்குவதற்கோ இடமளிக்க முடியாது என்ற பிரேரணை ஒன்றை முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபையில் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது. ஆனால் தேசிய காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் உறுப்பினர்கள் இதன் போது சபைக்கு வருகை தராமல் ஒளிந்து கொண்டனர்.

இதன்மூலம் குறித்த இரு கட்சிகளும் தாம் அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரானவை என்பதை எடுத்துக் காட்டியுள்ளன.

இனப் பிரச்சினைக்கு நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய தீர்வை எட்டுவதில் நாடு இதுவரை தோல்வியைக் கண்டுள்ளது.

எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமச் சீரற்ற அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும். -என்றார். (ச-30)

# காட்டு யானைகளால் மக்கள் விழித்திருப்பு



கல்முனை,நவ.5

சாய்ந்தமருது, வொலிவேரியன் கிராம வீட்டுத் திட்டத்தை அண்டிய கரைவாகுவட்டை பிரதேசத்தில் காட்டு யானைகளின் ஊடுருவல் நாளாந்தம் அதிகரித்து வருகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதிக்கு இரவில் வரும் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மக்கள் பெரும் பீதியுடன் விழித்திருக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்கு வரும் காட்டு யானைகள் எந்த நேரத்திலும் மக்கள் குடியிருக்கும் பகுதிக்குள் புகுந்து சேதங்களை விளைவிக்கலாம் என்ற அச்சத்தில் மக்கள் தீப்பந்தங்களை ஏந்தி பட்டாசு கொளுத்தி யானைகளை விரட்டி வருகின்றனர்.

மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி படையெடுக்கும் காட்டு யானைகளின் தொல்லைகளைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# கம்பியாறுக்கு குறுக்காக பாலம்

மட்டக்களப்பு, நவ.5

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பகுதியில் உள்ள கம்பியாறுக்குக் குறுக்காக பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வெள்ள இடர் ஏற்படும் காலங்களில் இந்த ஆற்றின் ஊடாக வெள்ளம் அதிகளவில் பாய்வதால் மண்டூரில் இருந்து காக்காச்சிவட்டை, ஆனைகட்டிய வெளி, பலாச்சோலை, நெடியவட்டை, சின்னவத்தை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ச)


### ஒத்துமாறல்

மேல்மாகாண (வத்தளை) பாடசாலையிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு கலைப் பட்டதாரி ஆசிரியர் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு : 077 362 6999 (29593)(7.6.3)

### வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:071 177 9790 (39541)(4.6.3)



கொம்ப்யூட்டர் ஆரம்ப நிலையிலிருந்து அலுவலகம் வரையிலான பயிற்சிகள்

60% Discount Offer

Advanced Diploma in Office Administration

ஒரே பாடநெறியில் 3 சான்றிதழ்கள் (Office Application, DTP, Accounting)

Certificate in MS Office Application

An ISO 9001: 2008 Certified Courses

பதிவுகள் ஆரம்பம்

CSC-ASIAN COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677

சாவகச்சேரி கட்டுக்காணி வீதி, 021 2270267

கிளிநொச்சி A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283925

வவுனியா 192, குருமண்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050

### வீடு வாடகைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மித்த தெல்லிப்பழை மெயின் வீதியை முகப்பாகக் கொண்ட சமையலறை, சாப்பாட்டு அறையுடன் மேலும் நான்கு அறைகள் கொண்ட தளபாடங்களுடன் கூடிய வசதியான வீடு இதற்கு மேலதிகமாக வீட்டுடன் இணைந்த TUITION நடத்தக்கூடிய 34'-0x11'-6" கட்டட வசதியும் உண்டு. வீட்டை நன்கு பேணக்கூடிய குடும்பத்திற்கு மட்டும் உடனடியாகக் குடிபுகக் கூடிய நிலையில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 203 5419, 077 375 3094 (39735)(4.6.3)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08★04★1935

மறைவு 15★11★2012

திருமதி

**நகுலாம்பிகை நடராசா**

திதி : துதியை

ஆண்டு ஒன்று ஆனதம்மா - ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில் குடியிருக்க
அன்புத் தெய்வமே அம்மா ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கஜன் கொன்ஸ்ரக்ஷன்
205, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளோடு
என்றும் வாழும்
குடும்பத்தினர்.

(39543)(7.6.3)

### மரண அறிவித்தல்

திருமதி **தங்கம்மா வேலாயுதம்**



யாழ்ப்பாணம், சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் தற்போது கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா வேலாயுதம் 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதத்தின் பாசமிகு மனைவியும், கீதாஞ்சலி, Dr.சிவகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்), சுதாஞ்சலி (ஆசிரியை, பெண்கள் உயர்தரப் பாடசாலை - கண்டி), சுரேஸ்குமார் (இலங்கை வங்கி பிரயாண சேவைகள் -யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதாகரன், நளினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகுலன், தயூரி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா- தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னவர்- சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னுத்துரை, காலஞ்சென்ற நன்னம்மா மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற நடராயா மற்றும் பாக்கியலக்ஸ்மி, கனகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குருந்துவத்தை பேராதனையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று இன்று (05.11.2013) செவ்வாய்க் கிழமை பி.ப.12.30 மணியளவில் பூதவுடல் மாகியாவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.45, குருந்துவத்தை,
அங்குவாவெல, பேராதனை, கண்டி. (சி/13545)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.
077 613 9005, 077 284 9535

# பாடசாலை இயங்காமை தொடர்பாக விசனம்

மன்னார், நவ.5

மன்னாரிலுள்ள சின்னப் புள்ளச்சி பொற்கேணியில் அமைந்துள்ள பாடசாலை இயங்குவதற்கான அனுமதியை வழங்குவதில் ஏற்படும் தாமதம் தொடர்பாக அங்குள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்துக்குக்கொண்டு வரும் வகையில் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.


அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சின்னப்புள்ளச்சி பொற்கேணி என்ற கிராமத்தில் அமைந்துள்ள மன்னார் கார்மேல் நகர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இதுவரை இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட குறித்த கிராம மக்கள் இடம் பெயர்ந்து சென்று தற் போது மீண்டும் குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் இவ்வருடம் ஜனவரி மாதம் இந்தப் பாடசாலை இயங்குவதற்கான அனுமதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது.

மேலும் கடந்த ஜூலை





மாதம் 15 ஆம் திகதி இப் பாடசாலைக்கென அதிபர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். ஆனால் இப்பாடசாலை இதுவரை இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் இதனால் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் இந்தப் பாடசாலையை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

ஏற்கெனவே குறித்த பாடசாலைக்கென வகுப்பறைக் கட் டடம்ஒன்று 'சேவாலங்கா' நிறுவனத்தினால் அமைக்கப்பட்டது. அது தற்போது சில விசமிகளினால் பலத்த சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த இயலாத நிலை க்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் ஏனைய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டாக்காலி மாடுகளின் உறை விடமாக மாறியுள்ளன.

இது தொடர்பாக மன்னார் வலயக்கல்வி அலுவலகத்துக்குப் பல முறை நேரடியாகச் சென்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. எமது கிராம மக்களின் கல்வி, ஆன்மிகம், பொருளாதாரம், பௌதிக வளம், கலாசாரம் போன்றவற்றில் அக் கறை செலுத்தி இந்தப் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (க-12)



கிளிநொச்சி கோணாவில் அ.த.க.பாடசாலையில் ஒளிவிழா நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. மேற்படி நிகழ்வுகள் பாடசாலை ஆசிரியர் கவிதாஸ் தலைமையில் கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றபோது சிறப்பு விருந்தினராக கத்தோலிக்க பாட ஆசிரிய ஆலோசகர் சு.சகாயராஜாவும் கௌரவ விருந்தினர்களாக கோணாவில் பகுதி அருட்தந்தை எம். ஜெயகாந்தன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பி.மணிவண்ணன் ஆகியோ ரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள். (க-426)

## அமைச்சரின் முடிவைப் பொறுத்தே

# கட்டண உயர்வு

### மன்னார் தனியார் பஸ் சங்கத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், நவ.5

வடமாகாண போக்கு வரத்து அமைச்சரின் முடிவைப் பொறுத்து கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு தெரிவித்தார் மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவரான ரி.ரமேஸ்;

தனியார் போக்குவரத்துச் சேவையினர் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ள போதிலும் மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் இதுவரை கட்டண அதி கரிப்பை நடைமுறைப்படுத்தவில்லை என சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. மீள் குடியமர்வு செய்யப்பட்டு அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் மக்கள் உள்ளனர்.

எமது சேவைகள் அதிகளவில் மீள்குடியமர்வுக் கிராமங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பாலசுப்பிரமணியம் டெனிஸ்வரனிடம் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளோம். அவரின் பதில் கிடைத்தவுடன் எமது கட்டண உயர்வை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

எமது பஸ் உரிமையாளர்கள் இன்னல்களுக்கு மத்தியில் எந்தவித இலாப நோக்கமும் இல்லாது சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைக்கருத்தில் கொண்டு அமைச்சர் இறுதி முடிவை எமக்கு விரைவில் வழங்க வேண்டும். அதனை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பாலசுப்பிரமணியம் டெனிஸ்வரனைப் பலமுறை தொடர்பு கொள்ள முயன்ற போதிலும் தொடர்புகொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)

## விவசாய அபிவிருத்தி தொடர்பான கூட்டம்



மன்னார், நவ.5

மன்னாரில் விவசாய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கடந்த 31 ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்றது.

இதில் காலபோக நெற்செய்கை, அதற்குரிய நீர் விநியோகம், உப- உணவுப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், கால்நடை வளர்ப்பு, கிராமிய தொழில் முயற்சி, வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழான விவசாய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட் டது.

அத்துடன் பயிர்ச்செய்கைக்கான காப்புறுதி, கடந்த காலங்களில் வங்கிகளால் வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள், அவற்றின் அறவீடுகள், புதிய கடன்களை வழங்குதல் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மேலதிக அரச அதிபர், விவசாய அபிவிருத்திக் குழுக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், வங்கிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-ரி)

## நேரடி பஸ் சேவை

நெடுங்கேணி, நவ.5

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பிலிருந்து பஸ் மூலமாக நேரடியாக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இன்று முதல் ஒன்றுவிட்ட ஒரு நாள் பி.ப 1 மணியளவில் வவுனியாவிலிருந்து புறப்படும் இந்த பஸ் நெடுங்கேணியூடாகப் பட்டிக்குடியிருப்பு செல்லும். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நெடுங்கேணி, ஒட்டுசுட் டான், புதுக்குடியிருப்பு, பரந்தன்ஊடாகச் சென்று யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

பின்னர் இந்த பஸ் மறுநாள் அதிகாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு அதே மார்க்கமாக வவுனியா சென்றடையும். (க-435)

# மிகவும் மோசமான நிலையில் கிளிநொச்சி- முழங்காவில் வீதி

கிளிநொச்சி, நவ.5

கிளிநொச்சி- முழங்காவில் பிரதான வீதி புனரமைக்கப்படாது மோசமான நிலையில் காணப்படுவதால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் இருந்து புது முறிப்பு, கோணாவில், அக்கராயன், ஆனை விழுந்தான், வன்னேரிக்குளம் ஊடாக முழங்காவில் நோக்கிச் செல்லும் இந்தப் பிரதான வீதி எவராலும் கவனிக்கப்படாது குன்றும், குழியும், சேறும், சகதியும் நிறைந்து காணப்படுகிறது.

இந்த வீதியில் தினமும் ஏராளமான மககள் பயணிக்கின்றனர். புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில், யூனியன்குளம், ஸ்கந்தபுரம், அக்கராயன், முக்கொம்பன், ஆனைவிழுந்தான்,



வன்னேரிக்குளம், ஐய னார்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியையே அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

மேலும் இந்த வீதியில் இலங்கை போக்குவரத்தச் சபைக்குச் சொந்தமான பஸ்கள், தனியார் பஸ்கள் என்பன சேவையில் ஈடுபடுகின்றன.

ஆனால் வீதியின் மோசமான நிலை காரணமாக இவை அடிக்கடி இடைவழியில் பழுதாகி நிற்பதைக் காணமுடிகின்றது.

இந்த வீதியூடாகவே பிற மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பயணம் செய்து இங்குள்ள பாடசாலைகளுக்கு வந்து செல்கின்றனர்.

மேலும் ஏராளமான மாணவர்கள் கிளிநொச்சி வந்து கல்வி கற்கின்றனர்.

இந்த நிலையில் இந்த வீதியைப் புனரமைக்க வென கோணாவில் பகுதியில் பறிக்கப்பட்டிருந்த கிரவல் மண்ணும் இராணுவத் தினரால் அவர்களின் தேவைக்கென எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

எனவே இந்த வீதியை இனியும் தாமதிக்காமல் உடனடியாகப் புனரமைக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-426)

## அஷ்ரப் வைத்தியசாலை வெள்ளிவிழா டிசெ.14



மட்டக்களப்பு, நவ.5

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழாவை அடுத்த மாதம் 14 ஆம் திகதி சிறப்பான முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை 1988 ஆம் ஆண்டு அப்போதைய முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராக இருந்த முன்னாள் வர்த்தக, வாணிப அமைச்சர் ஏ.ஆர். மன்சூரினால் பிர சவ விடுதியாக ஆரம்பிக்கப் பட்டது.

வெள்ளிவிழாவில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் மன்சூர் உட்பட வைத்தியசாலை அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புச் செய்த அனைவரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வெள்ளிவிழா வைபவத்தையொட்டி வைத்தியசாலையின் உட்கட்டுமான அபிவிருத்தி பணிகள் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச)

மாநகர முதல்வர் பதவி விவகாரம்:

# மு.காவின் முடிவில் மாற்றமே இல்லை

கல்முனை,நவ.5

கடந்த முதலாம் திகதியிலிருந்து சிராஸ் மீராசாஹிப்பை கல்முனை மாநகரசபை முதல்வராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாது என்ற எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

இவ்வாறு கட்சியின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவுப் ஹக்கீம், ஞாயிற்றுக்கிழமை தன்னை தனித்தனியாக சந்தித்து அந்த விவகாரம் தொடர்பில் கலந்துரையாடிய சாய்ந்த மருது ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் மற்றும் அந்த ஊர் முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு உறுப்பினர்கள் ஆகியோரிடம் மிகவும் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

குறைந்த பட்சம் இன்னமும் ஆறு மாதங்கள் மீராசாஹிப் முதல்வர் பதவியில் நீடிப்பதற்கு அனுமதிக்க முடியுமா என்று சாய்ந்த



மருது ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை சார்பிலும், ஊர் மக்கள் சார்பிலும் தலைவர் வை. எம். ஹனிபா ஹாஜியார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்த போது, ஆறு மாதங்களுக்கு அல்ல, இன்னும் ஆறு மணித்தியாலங்களுக்குக் கூட தமது கட்சி அவரை முதல்வராகவோ, கட்சிக்காரராகவோ அறவே அங்கீகரிக்காது என்று அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

சிராஸ் மீராசாஹிப், கட்சித் தலைவர் ஹக்கீமை மீண்டுமொரு தடவை சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரமுடியுமா என்று கேட்டதற்கு, கடந்த மாதம் 31 ஆம் திகதியிட்ட பதவி விலகல் கடிதத்துடன் வந்தால் மட்டுமே தன்னைச் சந்திக்க முடியும்.

அவ் வாறு அவர் செய்தால் கட்சியின் கட்டுக்கோப்பை மீறிச் செயல்பட்டதை மன்னிக்க முடியும் என்று அமைச்சர் ஹக்கீம் பதிலளித்தார்.

சாய்ந்தமருது மக்களின் சார்பில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் என்ற அடிப்படையில் சிராஸ் மீராசாஹிப்பின் முதல்வர் பதவியின் காலத்தை நீடிப்பதற்கு இணக்கம் தெரிவிக்குமாறு நம்பிக்கையாளர் சபையினர் கூட்டாக அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்து, தமது தரப்பு நியாயங்களை முன் வைத்தனர்.

அவற்றை அமைதியாகச் செவிமடுத்த கட்சித் தலைவர் ஹக்கீம் கூறியதாவது:-

சிராஸ் மீராசாஹிப் கட்சியினதும் தலைமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டை மீறிச் செயல்படுவது மட்டுமன்றி கட்சித் தலைமைத்துவத்துக்கு சூளுரைத்து, சவால் விடவும் ஆரம்பித்து விட்டார்.


தனது ஊருக்குச் சென்று விட்டு வந்து பதவி விலகிக் கொள்வதற்கு அவகாசம் கேட்ட அவர், கடந்த ஒரு வார காலத்துக்குள் யார், யாருடன் சந்திப்புக்களை ஏற்படுத்தியிருந்தார் என்பதும், அதற்கு முன்னரும் எவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தார் என்பதும் நன்கு கண்காணிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முடிவில் எந்த மாற்றமும் இல்லை. எனவே வேறு விட்டுக்கொடுப்புகளுக்கு இடமேயில்லை. இந்த முடிவை ஏற்றுக் கொள்ளுங்கள். - என்றார். (ச)

## 'சிகரெட்' விற்பனைக்கு காத்தான்குடியில் தடை

கல்முனை,நவ.5

காத்தான்குடி நகரசபை பிரிவிலுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவகங்களில் சிகரெட் விற்பனை



செய்வதற்க்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று நகரசபைத் தலைவர் எஸ்.எச். அஸ்பர் தெரிவித்தார்.

இந்தத் தடை எதிர்வரும் 10 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் காத்தான்குடி நகரசபைக்குட்பட்ட பிரிவில் சிகரெட் விற்பனையை முற்றாக தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு முன்னோடியாகவே ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவகங்களில் சிகரெட் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

காத்தான்குடி நகரசபைப் பிரிவிலுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவகங்களில் கை துடைப்பதற்கு அச்சிட்ட கடதாசிகள் பயன்படுத்தக் கூடாது.

அதற்குப் பதிலாக வெள்ளைக் கடதாசிகளையே பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். ஹோட்டல்களில் உணவு தயாரிப்பதற்கு பயன்படுத் தப்படும் எண்ணெயில் மீதவாவதைப் பயன்படுத்தக் கூடாது என்று அவர் தெரிவித்தார்.



மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் பாசிப்பயறு அறுவடை நிந்தவூரில் இடம் பெற்றபோது விருந்தினர்கள் அறுவடை செய்யப்பட்ட பாசிப் பயற்றை பார்வையிட்டனர்.

## வாகன விபத்தில் 8 பேர் காயம்

மட்டக்களப்பு,நவ.5

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் செட்டிபாளையம் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் மட்டக்களப்பில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி வந்த இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச)

## அபிவிருத்தியைக் காட்டி பிரதேசங்கள் அபகரிப்பு

### சாடுகிறார் மாகாணசபை உறுப்பினர்

மட்டக்களப்பு,நவ.5

கிழக்கு மாகாண மக்கள் விழிப்புடன் செயற்படாவிட்டால் எமது நிலங்களை மேலும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ்ப் பிரதேசங்கள் இன்றும் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்துமாமன்றங்களின் செயற்பாடானது இந்து சமய கலை, கலாசாரங்களையும், விழுமியங்களையும் கட்டிக்காத்து எமது இளம் சமூகத்துக்கு வழங்க வேண்டும்.

66 வருட கால போராட்ட வரலாற்றில் தமிழர்கள் பல இழப்புக்களை சந்தித்து இருக்கின்றனர். அதாவது பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், அரசியல் ரீதியில் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் தான் எமது நிலங்கள் நாளுக்கு நாள் அபகரிக்கப்பட்டு வருகின்றது.

அன்று விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டி தமிழர் பிரதேசங்கள் அனைத்துத் துறைகளிலும் புறம் தள்ளப்பட்டு வந்தது.

அதேபோன்ற ஒரு நிலைதான் இன்றும் நடைபெற்று வருகின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ்ப் பிரதேசங்கள் இன்றும் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் தமிழ். முஸ்லிம் உறவுகள் சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையுடனும் வாழ வேண்டும். இதற்காக எம்மினம் பல விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளவும் தயாராக இருக்கிறது.

இந்தக் காலகட்டத்தில் இதனை சகித்துக்கொள்ள இயலாத சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து தமிழர்களின் விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டும் என்று திட்டம் தீட்டிச் செயற்படுகின்றனர் - என்றார். (ச-31)



# சனல்-4 காணொலி போலியானதில்லையெனில் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

இலங்கை மீது போர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி, ஒளிபரப்பட்ட சனல்-4 தொலைக்காட்சியின் புதிய காணொலி உண்மையானது என்றால் மட்டும் அது பற்றி சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும், மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் எழுதிய கடிதம் ஒன்றில் இந்த காணொலி தொடர்பில் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கேட்டிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிடும் போதே உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மஹிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தான், எமக்கும் அரசுக்கும் இடையில் இணக்கப்பாடுகள் உள்ளன. ஏனைய எந்த விடயங்கள் தொடர்பில் பரஸ்பர நிலைப்பாடுகள் இருக்க முடியும்.

அத்துடன் ஈ.பி.டி.பிக்கும் எமக்கும் இடையிலான நிலைப்பாட்டில் பெரிய வித்தியாசங்கள் இல்லை.

அமைச்சர் டகள்ஸ், விசாரணை நடத்துமாறு கூறுகிறார். அந்த காணொலி போலியானது இல்லையென்றால் மட்டும் விசாரணை நடத்த வேண்டும் என நாங்கள் கூறுகிறோம்.

சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பானாலே எமக்கு சந்தேகம் ஏற்படுகிறது. இராணுவம் இது போலியானது என தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியதை காணமுடிந்தது.

அந்தக் காணொலி போலியானது என்று ஆய்வுகளில் தெரியவந்தால் அது பற்றி விசாரணைகளை நடத்த வேண்டியதில்லை.

அதனை விடுத்து இராணுவத்தினர் அல்லது தனிப்பட்ட இராணுவ சிப்பாய்க்கு எதிராக உண்மையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் அது பற்றி விசாரணை நடத்தி, இராணுவத்தின் மதிப்பைத் தற்காத்து கொள்ள வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

# கொரிய மொழிப் பரீட்சை இலங்கைக்கு முதலிடம்

கொரியமொழி தகுதி காண் பரீட்சை நடைபெற்ற 15 நாடுகளுள் 2011ஆம், 2012 ஆம் ஆண்டுகளுக்கான சிறப்பு இடங்களை இலங்கை பெற்றுள்ளது என கொரிய மனித வள அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கான முன்னேற்பாடுகள், வழங்கப்பட்ட பாதுகாப்பு, பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் இலங்கை முதலிடம் பெற்றுள்ளது.

இந்த சிறப்பான சாதனைக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கும், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கும் விசேட பாராட்டைத் தெரிவிப்பதாகவும் கொரிய மனித வள அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சர்வதேச பிரதிநிதிகள் 10 முதல் இலங்கைக்கு

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள வெளிவிவகார செயலாளர்கள் உள்ளிட்ட வெளிநாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிமுதல் நாட்டுக்கு வருகைதரவுள்ளனர்.

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் வெளிவிவகார அமைச்சர்கள் நாட்டுக்கு வருகைதரவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சின் பொதுத் தொடர்பாடல் பிரிவின்பணிப்பாளர்நாயகம்ரொட்னி பெரேரா குறிப்பிட்டார்.

வெளிநாடுகளின் அரச தலைவர்கள் 14 ஆம் திகதி முதல் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மதவாத செயல்களில் ஈடுபடுவோரை தடுக்க உடன் சட்டம் நிறைவேற்றுக!

## சிறுபான்மை கட்சிகளிடம் ஐ.தே.க. அமைப்பாளர் கோரிக்கை



மதவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோரைத் தடுக்கும் சட்டமொன்றை நாடாளுமன்றில் உடன் நிறைவேற்றவேண்டுமென குருநாகல் மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளர் சஹறாப்தீன் ஹாஜியார் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளிடமும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மேற்படி கோரிக் கையை முன்வைத்துள்ளார் சஹறாப்தீன் ஹாஜியார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மேற்படி சட்டம் நிறைவேற்றப்படுமாகவிருந்தால் தற்போது மத எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் இயக்கங்களையும் அமைப்புகளையும் உடன் தடைசெய்ய வழியேற்படும்.

குறித்த மத எதிர்ப்பு இயக்கங்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்குவதாகப் பரவலாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. இந்தப் பாதுகாப்பைத் தகர்த்தெறிய இந்தச் சட்டம் வழிகோலும். பாதுகாப்பு வழங்கிய பொலிஸாரே இந்த மத எதிர்ப்பாளர்களைக் கைதுசெய்யும் நிலை தோற்றம்பெறும்.

இது தொடர்பில் அமைச்சர் வாசுதேவநாணயக்கார அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்திருந்தார். ஆனால் அந்தப் பத்திரத்துக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

இது விடயத்தில் மு.கா. மற்றும் த.தே.கூ. உட்பட அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் கவனம் செலுத்த வேண்டும். காலம் தாழ்த்தியதால் இதுவரை மூன்று மதவாத இயக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்னும் நாம் காலம்தாழ்த்துவோமாயின் இன்னும் பல இயக்கங்கள் உருவாக வழியேற்பட்டுவி டும். நாட்டின் ஒற்றுமை சீர்குலையும் நடுதுண்டாடப்பட்டுவிடும்

தம்புள்ளை கோயில் இடிப்பு விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்துஜனாதிபதியிடம் முறையிடவேண்டும்.

இனிமேலும் சிறுபான்மையினருக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்படாத வகையில் பாதுகாத்து, இதுவரை மதவாத செயற்பாடுகளில் ஈடுபட்டோரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மதவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோரைத் தடுக்கும் சட்டமே இவைகளுக்கு உரிய விமோசனமாக அமையும். எனவே, பிரிவினையைத் துறந்து அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் இதற்காகவாவது ஒன்றுபட்டு சிறுபான்மை இனங்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழியேற்படுத்திக் கொடுக்க முன்வரவேண்டு மென்றும் அமைப்பாளர் சஹறாப்தீன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய தலைவர்களுக்கான ஒன்றிணைந்த தேசிய ஜெபமாநாடு

## இலங்கை திருச்சபையின் கொழும்பு வாழ் மீட்பர் பேராலயத்தில் ஆரம்ப நிகழ்வு 7ஆம் திகதி

இலங்கையில் நடைபெறும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொதுநலவாய அரச தலைவர்களது மாநாடு இலங்கை மக்களின் தனித்துவத்தையும், நாட்டின் சிறப்பையும் உலக அரங்குக்கு எடுத்துக் காட்டுகின்ற நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இதில் இலங்கை கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றிணையுமாறு தேசிய ஜெப மாநாட்டின் ஒழுங்கமைப்புக் குழுவின் இணைப்பாளர்களான மாநாட்டின் தலைவி திருமதி சிறியாணி விக்கிரமநாயக்க, முகத்துவார மிஸ்பா பெமினரி ஆலயத்தின் பிரதான போதகர் அருட்திரு. கலாநிதி எம். சாரங்கபாணி ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

அந்த அறிக்கையில் இவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பொதுநலவாய அரச தலைவர்களது மாநாடு ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வெவ்வேறு நாடுகளில் நடைபெற்று வருகின்றது. இது 54 நாடுகளிலுள்ள 2.1 பில்லியன் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் உலகின் தேசிய தலைவர்களில் நான்கில் ஒரு பங்கினரையும் அவர்களது துணை வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் வர்த்தக வலயங்களின் தலைவர்கள் என அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு விசேட மாநாடாகும்.

இலங்கை தேசத்தில் நடைபெறவிருக்கின்ற அரச தலைவர்களது மாநாடு கொழும்பிலும், அம்பாந்தோட்டையிலும் நடைபெறுவதையிட்டு எமது மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் தெரிவித்து கொள்கின்றோம். இந்த மாநாட்டை முன்னிட்டு தேசத்தின் கிறிஸ்தவ சபைகளின் ஒன்றி ணைந்த பிரார்த்தனையும் ஜெபத்தையும் தொடர வேண்டிய தேவை உள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள இலங்கைத் திருச்சபையின் கொழும்பில் வாழும் மீட்பர் பேராலயத்தில் கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதி வண. டிலோரர் ரஞ்சித் கனகசபை அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதல் நாளான 7ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் கொடிகள் ஏற்றும் மங்கள வைபவத்துடன் ஆரம்பமாகவிருக்கும் இந்நிகழ்வில், தொடர்ந்து வரும் தினங்களில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றது. 9ஆம் திகதி பல்வேறு கலாசார நிகழ்வுகளோடு அன்று மாலை 5.30 மணிக்கு மெழுகுதிரி விழிப்பு இராத்திரியின் சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இதுவே உங்களின் நேரம் நல்ல தருணம் தேவனின் பிரசன்னம் நிரம்பிய இலங்கை நாட்டில் பொதுநலவாய அரச தலைவர்களின் வருகைக்கு எமது வாழ்த்துக்கள்.

ஒரேநாடு ஒரேமக்கள் எனவும் ஓரணியில் இணைந்திடுவோம். - என தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.



ஐ.தே.கட்சியின் மாத்தறை தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபடாதவர்களைக் கைது செய்து தடுத்து வைத்தலுக்கு எதிராகக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, ஆகியோர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறையிட்டனர்.

# விசேட தேவையுடையோருக்கு அடுத்தாண்டு தொழிற்பயிற்சி

## விண்ணப்பம் கோருகிறது சமூக சேவைகள் திணைக்களம்

விசேட தேவையுடையவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கும் செயற்றிட்டமொன்றை முன்னெடுப்பதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடெங்கிலும் உள்ள 5 தொழிற்பயிற்சி நிறுவனங்களில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதெனதிணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல குறிப்பிட்டார்.

இலவசமாக நடத்தப்படும் இந்த தொழிற்பயிற்சிகளுக்கு 16 முதல் 35 வயதான விசேட தேவையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியுமென அவர் தெரிவித்தார். 3 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையிலான காலப் பகுதியைக் கொண்டதாக இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டுக்கான தொழிற்பயிற்சி நடவடிக்கைகளுக்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அவ்வாறானவர்கள் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கின் கடல் வளத்தைத் தக்கவாறு பயன்படுத்த முனைப்புடன் செயலாற்றுக

மன்னார் மாவட்டத்தின் சௌத்பார் தென்பகுதிக் கடற்கரைப் பகுதியில், அதே பிரதேசத்தைச் சேர்ந்த தமக்குத் தொழில் செய்வதற்குப் பல குந்தகங்களும் இடையூறுகளும் உள்ளதாக, பனங்கட்டிக்கொட்டு கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆனால் சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் வருடத்தில் ஆறு மாதங்கள்-நவம்பர் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை-தங்கியிருந்து தொழில் செய்கின்றார்கள். அதற்கான சகலவித அனுசரணையும் ஆதரவும் அரச அலகுகளால்-கடற்படை மற்றும் பொலிஸாரால் வழங்கப்படுகின்றன.

வெளிப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தமது குடும்பங்களுடன் வந்து குடியேறி, மன்னார்க் கடல் வளத்தைத் தாராளமாகத் தமதாக்கிக் கொள்கிறார்கள். அள்ளி அள்ளிப் பணம் சேர்க்கிறார்கள். தங்கு தடையின்றி மன்னாரின் வளம் பிற பிரதேசத்தவர்களால் சுரண்டப்படுகிறது என்று கொள்வது தப்பன்று.

ஒரே நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட வேறு பிரதேசங்களில் தொழில் செய்யக் கூடாது என்று தடுக்க முடியாது. அல்லது தடை செய்ய இயலாது என்று மன்னாரில் நடத்தப்படும் கடற்றொழில் சார் சுரண்டலுக்கு நியாயம் கற்பிக்கப்படலாம் அல்லது பூசி மெழுகப்படலாம். எதுவானாலும் தமது தொழில் மீதான இடையூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படாவிடில், அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கப்போவதாகப் பனங்கட்டிக்கொட்டுக் கடற்றொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

போர்க் காலத்திலும், அதன் பின்னரான காலத்திலும் வடபகுதி மீனவர்கள் பலவகைகளிலும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்தது. அமைதி நிலவும் இந்தக் காலத்திலும் அவர்களை மேன்மேலும் பாதிப்புறச் செய்வது, பல வடிவங்களில் அவர்களின் வாழ்வாதாரத்தை நலிவுறவைப்பது, எந்த வகையிலும் ஏற்கக் கூடியதோ அன்றி நியாயப்படுத்த வல்லதோ அன்று.

தென்பகுதி மீனவர்கள் அனுமதிப் பத்திரம் இன்றி மன்னார்க் கடலின் வளத்தைச் சுரண்டிச் செல்வதற்கு ஒத்தாசை வழங்கும் ஆட்சி அதிகாரிகள், உள்ளூர் மீனவர்களுக்கு பல நடை முறைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்று கட்டுப்பாடுகளும், ஒவ்வாத விதிமுறைகளையும் விதிப்பது என்ன நியாயம்?

மன்னார் பிரதேச மீனவர்களைப் போன்றே வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர்களும் தொலைவில் உள்ள பிற பிரதேச மீனவர்களால் பாதிப்புறுகிறார்கள், தமது தொழில் வருமானத்தை இழக்கிறார்கள்.

எமது நாட்டின் பிற பிரதேசங்களில் இருந்து மட்டுமன்றி, தமிழகம், கேரளம் ஆகிய இந்திய மாநிலங்களில் இருந்தும் வடக்கின் கடல் வளம் சூறையாடப்படுவதால் பெரும் பாதிப்புகளும், கடற்றொழிலாளர்களின் வருமானத்தில் வீழ்ச்சியும் ஏற்படுகின்றன.

அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று அரச தரப்பினால் அவ்வப்போது அறிவிக்கப்பட்டாலும், அது இன்னும் உத்தியோகபூர்வமாக முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதுவரை வடக்கு மாகாண சபை இயங்காததால் இது விடயத்தில் போதிய அக்கறையும் கவனமும் எடுக்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று ஆட்சியும் ஆரம்பமாகிவிட்டதால், எங்கள் பிரதேசத்தின் மூன்று முக்கிய இயற்கை வளங்களில் ஒன்றான கடல் வளத்தையும் அதுசார்ந்த தொழிற்றுறையையும் தக்கவாறு பயன்படுத்த விரைந்து செயற்பட வேண்டும்.

கடல்வளம், அதனைப் பேணுதல் ஆகிய அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் சேர்ந்தாற்போல் உள்ளதால், (Concurrent List) மாகாண அரசு இது விடயத்தில் முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும். எமது மக்களுக்கு உரிய தேவைகள், சேவைகள் பல, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக ஏறெடுத்தும் பார்க்கப்படாத நிலை நீடித்தது. அதனைத் தகர்த்து எறிய மாகாண சபைக்கு மக்கள் அமோக ஆதரவு தந்துள்ளார்கள். விரைந்து செயற்பட வேண்டிய பொறுப்பு மாகாண சபைக்கே.

# இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள்

## கண்டிக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக டேவிட் கமரூன் மற்றும் 50 நாட்டுத் தலைவர்கள் இலங்கைக்கு வரவுள்ள நிலையிலும் கூட, இந்நாட்டுப் பாதுகாப்புப் படைகள் தொடர்ந்தும் பாலியல் குற்றங்கள் மற்றும் சித்திரவதைப்படுத்தல்களில் ஈடுபடுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 15 ஆம் திகதி முதல் இலங்கையின் தலைநகரான கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமறூன் மற்றும் பிரித்தானிய இளவரசர் ஆகிய இருவரும் பங்கேற்கவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் மிக மோசமாக ஆள்கள் காணாமற்போன சம்பவங்கள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை, ஈராக்குக்கு அடுத்த இடத்தில் உள்ளது. இதுவரையில் இலங்கையில் காணாமற் போனவர்கள் தொடர்பான 5,676 வழக்குகள் வரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்நாட்டுப் போர் 2009இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், இன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகிறது. இலங்கையைச் சேர்ந்த ஒருவர் 18 மாதங்கள் வரை எவ்வித குற்றங்களும் சுமத்தப்படாது சந்தேகத்தின் பேரில் சிறையில் அடைத்து வைக்கப்படுவதற்கான அனுமதியை பயங்கரவாதத் தடைச் சட்டம் வழங்குகிறது.

### ஓயாது தொடரும் சித்திரவதைகள்

இலங்கையின் தடுப்பு முகாங்களில் வைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட மற்றும் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவங்களில் 10 வரையான சம்பவங்களை மனித உரிமைகள் கண்காணிப்பகம் பதிவு செய்துள்ளது.

இலங்கையில் அண்மைய மாதங்களில் காணாமற் போகின்ற சம்பவங்கள் மிக அதிகம் இடம்பெறுகின்றன. இலங்கையின் வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்தில் வைத்து ஆகஸ்ட் 12 அன்று தான் வெள்ளை வான் ஒன்றில் கடத்தப்பட்டதாக 30 வயதான பெண்மணி ஒருவர் டெய்லி ரெலிகிராப் ஊடகத்திடம் தெரிவித்துள்ளார். இந்தப் பெண்மணி கண்கள் கட்டப்பட்ட நிலையில், வெள்ளை வான் ஒன்றில் கடத்தப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து 90 மைல்கள் தொலைவிலுள்ள வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

வவுனியாவில் வைத்து இந்தப் பெண்மணி சித்திரவதைகளுக்கு உள்ளாகப்பட்டுள்ளார். தன்னைச் சித்திரவதை செய்தவர்கள் இலங்கை குற்றவியல் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் எனத் தான் நம்புவதாகப் பாதிக்கப்பட்ட இந்தப் பெண்மணி தெரிவித்துள்ளார். ஆண்கள் தன்னை இரும்புக் கம்பிகளால் தாக்கியதாகவும் இவர் குறிப்பிடுகிறார். ஆகஸ்ட் 31 அன்று, இந்தப் பெண்மணி கண்கள் கட்டப்பட்ட நிலையில் மீண்டும் வாகனத்தில் ஏற்றப்பட்டார். தான் படுகொலை செய்யப்படப் போவதாக இந்தப் பெண்மணி கருதினார். ஆனால் இதற்குப் பதிலாக இவரது மாமாவைச் சந்திப்பதற்காக இவர் கூட்டிச் செல்லப்பட்டார். இந்தப் பெண்மணியின் மாமனார் இவரைக் கடத்தியவர்களிடம் பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாகக் கொடுத்த பின்னரே இவர் விடுவிக்கப்பட்டார். இதன் பின்னர் இந்தப் பெண்மணி இந்தியாவுக்குத் தப்பிச் சென்று அங்கிருந்து புகலிடம் கோரி தற்போது பிரிட்டனில் தஞ்சம் புகுந்துள்ளார்.

நான் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு என்னால் உயிருடன் வாழமுடியாது என லண்டனிலிருந்து இந்தப் பெண்மணி தொலைபேசி மூலம் கூறினார்.

### பொறுப்புக் கூறத் தவறும் இலங்கை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தகவல் வழங்கியவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே தான் கடத்திச் செல்லப்பட்டதாக இந்தப் பெண்மணி தெரிவித்தார். ஆனால் தனக்கெதிராக எவ்வித குற்றங்களும் முன்வைக்கப்படவில்லை எனவும் கூறினார். இவரது உடலிலிருந்த வடுக்கள் மற்றும் தடயங்களைக்கொண்டு இந்தப்பெண்மணி வழங்கிய வாக்குமூலங்கள் அனைத்தும் உண்மையானவை என்பதை வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போதும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இவ்வாறான புதிய சாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்நிலையில், இலங்கை அரசு மீது அனைத்துலக சமூகமானது தனது அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இவ்வாறான மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு எவ்விதத்திலும் பொறுப்புக் கூறாது தனது குற்றத்தை நிராகரித்து வருவதைச் சுட்டிக்காட்டி, இலங்கையில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டைத் தான் புறக்கணிப்பதாக கனேடியப் பிரதமர் ஏற்கனவே அறிவித்துள்ளார்

### மாநாட்டை புறக்கணிப்பார்களா?

இதேபோன்று இந்த உச்சி மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியற் தலைவர்கள் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இலங்கைக்குத் தான் செல்லவுள்ளதாகவும் ஆனால் இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தான் மகிழ்ச்சி கொள்ளவில்லை எனவும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார். குறிப்பாக, இலங்கையில் போரால் மிகவும் பாதிக்கப்பட்டதும் தற்போதும் சித்திரவதைகளுக்கு உட்படுவதுமான வடக்கு மாகாணத்துக்கு முதன் முதலாக சுற்றுப் பயணம் செய்யும் பிரதமர் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் ஆவார்.

இலங்கையில் இடம்பெற்ற காணாமற் போனோர் தொடர்பான வழக்குகள் தொடர்பில் சுயாதீனமான அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரிட்டன் பிரதமர் பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் கோரிக்கை விடுக்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. மக்கள் இது தொடர்பில் பகிரங்கமாகக் கூற அஞ்சுகின்றனர். பாதிக்கப்பட்டவர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தப்படுகின்றனர். இலங்கையில் இழைக்கப்படும் மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகமானது தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கின்றது என்பதையும், இதற்கான நீதி எட்டப்படும் வரை இந்த அழுத்தம் தொடரும் என்பதையும் பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் இலங்கை அரசுக்கு நினைவூட்ட வேண்டிய தேவையுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசியாவுக்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

*(நன்றி: புதினப்பலகை)*



# முதியவர்களும் குழந்தைகளே

மீரா குபேரமூர்த்தி

மனிதனுடைய வாழ்க்கைப் பருவம் அவனுடைய ஆயுள் காலத்திற்கேற்ற வகையில் மாற்றமடைந்து கொண்டிருக்கும். குழந்தை, இளமை, முதுமை என எமது வாழ்க்கைப் பருவத்தில் பல்வேறு சம்பவங்களையும், அனுபவங்களையும் நாம் பெறமுடியும்.

இந்த வாழ்க்கைப் பருவத்தில் "முதுமைப் பருவம்" வாழ்க்கையில் கடைசிக் காலம். முதியவர்கள் ஓர் அனுபவசாலிகளாக மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பார்கள். இந்தப் பருவத்தில் இப்படியான அனுபவசாலிகளை, வழிகாட்டி களை எமது சமூகம் சார்ந்தவர்கள் எந்தளவுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். முதியவர்கள் குழந்தையைப் போன்றவர்கள். முதுமையில் மீண்டும் குழந்தைப் பருவம் பெறும் இந்த முதியவர்களை சமூகத்தினால் பேணப்பட வேண்டும்.

அன்பு, அரவணைப்பு, மருத்துவம் என அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு உறவுகள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். "காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்" மனிதனுடைய வாழ்க்கையும் அவ்வாறேதான். நாமும் என்றோ ஒரு தருணத்தில் முதியவர் எனும் நிலையை அடையப் போகிறவர்கள். எமது பாரம்பரியத்தையும், சந்ததியையும் வளர்த்தெடுத்த தற்கால முதியவர்கள் உடல் உள ரீதியாக பாதிப்படையாத வகையில் சேவையை வழங்க நாம் முன் வரவேண்டும்.

## அனுபவப் பருவம்

வாழ்க்கைப் பயணத்தில் காலடி வைத்துள்ள சிறுவர் தரப்பைப் போன்றே வாழ்க்கைப் பயணத்தில் கடைசிப் பகுதியை எட்டியுள்ள முதியோர் தரப்பும் பயணத்தில் பல்தரப்பட்ட அனுபவங்களைப் பெற்றதன் மூலம் வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்ந்து தெளிந்து கொண்டதோர் சமூகமாகக் கொள்ளத்தக்க தொன்றே, வாழ்க்கை அனுபவம் வாய்க்கப் பெற்ற முதியோர் தரப்பின் கருத்துக்களும், செயற்பாடுகளும் புறந்தள்ளி விட இயலாதவை. வாழ்ந்து முடிந்து முதுமையால் சோர்ந்து போயுள்ள அம்முதியோர் தரப்பு எம் வாழ்க்கையின் பொக்கிஷங்கள். எமது வாழ்வியலின் முதுகெலும்புகள். மதிப்பும், மரியாதையும் வழங்கிப் போற்றிப்பட வேண்டியவர்கள்.

என்றோ ஒரு நாள் முதுமை வரும் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாமல் எம்மில் பலர் எம் வயதான உறவுகளை, நெருங்கிய உறவினர்களை, பெற்றோரை அலட்சியப் போக்குடன் நடத்த முயல்கிறோம். அவர்களது மனதுகளை நோகடிக்கிறோம். எமது இத்தகைய வாழ்வியல் போக்குகள் தவறானவை. வயதான முதியோருக்கு நாம் கௌரவமளிக்க வேண்டியது எமது கடமை.

தனது வயதான பாட்டனாரை அவரது மகனான தனது தந்தை பேச்சளவில், செயலளவில் வருத்துவதைக் கண்டு மனது பொறுக்காமல் அந்த வயதான முதியவரின் பேரன், தனது தந்தையும் தனது முதுமைப் பருவத்தில் அதே விதத்தில் தன்னால் நடத்தப்பட நேரும் என்பதைத் தனது செய்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியதான கதை ஒன்று எமது சமூகத்தில் மிக நீண்ட காலமாகவே வழக்கில் இருந்து வருவதை எம்மில் பலர் அறிந்துள்ளோம். அந்த வகையில், எமது வயதான உறவுகளை என்றும் புறக்கணிக்காது அவர்கள் மகிழ்வும், திருப்தியும் அடைய வைக்கும் விதத்தில் நாம் செயற்பட வேண்டும்.

## குழந்தைகளாக நினையுங்கள்

நாங்கள் ஒவ்வொருவரும் அவர்களை முதியோர் என்று பார்ப்பதை விடுத்து குழந்தைகளாக நினைத்துப் பார்க்க வேண்டும். நாம் குழந்தையாக இருந்த காலத்தில் செய்த குறும்புகளால் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், மனத்துன்பங்கள் அனைத்தையுமே தாங்கிச் சிரித்த முகத்துடன் பொறுமை காத்து எங்களை வளமாக்கியவர்கள் அவர் கள். அவர்களின் சொத்துக்கள் அனைத்தையுமே எங்களுக்காக தாரை வார்த்தவர்கள். அத்தகைய முதிய குழந்தைகளை ஒவ்வொரு பிள்ளைகளும் துன்பப்படவிடக் கூடாது.

முதியோர்கள் இல்லாத வீடுகள் கருவறை இல்லாத கோயில் போன்றது. பெற்றவர்களுக்கு கடமை செய்யாது ஆலயம் சென்று வணங்குவதில் என்ன பயன். பெற்றவரின் கடமையை சரிவரச் செய்தால் இறைவன் உன்னைத்தேடி உன் இருப்பிடம் வருவான். பெற்றவர்களுக்கு, முதியோருக்கு நோய் வந்தால் அவர்களைப் பாதுகாப்பான முறையில் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும். முதிய குழந்தைகள் பொக்கிஷங்கள், இவர்களின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.

# வரணி-குடத்தனை ஆறாம்கட்டை பகுதி வரையான ஒன்றரை கி.மீற்றர் வீதி கவனிக்கப் படாத நிலையில்

## மாரி காலத்தில் போக்குவரத்து துண்டிக்கப்படும் அவலம்

அரூரங்கன்



வரணி-குடத்தனை வீதியின் ஒரு பகுதியான வரணிப் பிரதேச வடக்கு கிராம எல்லைப் பகுதிக்கும், குடத்தனை ஆறாம் கட்டைப் பகுதிக்கும் இடைப்பட்ட சுமார் 1.5 கிலோ மீற்றர் தூரமான வீதி, சுமார் 65 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லை. குறிப்பிட்ட புனரமைக்கப்படாத பாதை மக்கள் குடியிருப்பு அற்றதும் உவர் நிலக் காட்டுப் பிரதேசமுமாகும்.

வரணி மாசேரி கிராம எல்லையில் உள்ள மயானம் வரை இந்த வீதி கடந்த காலங்களில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டது. மிகுதியான பிரதேச பாதையே இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளதுடன் மாரி காலத்தில் இந்தப் பாதையின் ஒரு பகுதியில் பாதையை மேவி வெள்ளம் பாயும் நிலையுள்ளது. இதனால் குறிப்பிட்ட வீதி மண்ணால் மூடப்பட்ட நிலையில் மண் தரவைப் பகுதியாகவே தற்போது காணப்படுகின்றது. இந்த வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள், தில்லை மரங்கள், கண்டல், முள் மரங்கள் என்பன வளர்ந்து பாதையைத் தொடும் நிலையில் உள்ளன.

இந்த வீதி பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் வரணி தென்னிந்திய திருச்சபைக்கு அண்மையில் இருந்து தொடங்கி இடைக்குறிச்சி மாசேரி கிராமங்களை ஊடறுத்துச் சென்று, வரணி பிரதேசத்தின் வடக்கு எல்லையான சவர் நிலத் தரை ஊடாக பருத்தித்துறை-மருதங்கேணி வீதியில் ஆறாம் கட்டைப் பகுதி என்றழைக்கப்படும் பகுதியில் முடிவடைகிறது.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி கிழக்குப் பகுதி இரண்டையும் இணைக்கும் குறுகிய தூர வீதியாக இது விளங்குகின்றது. இதன் காரணமாகவே இந்த வீதி போக்குவரத்துக்கு மிகப் பிரபல மாக விளங்குகின்றது. கடந்த வருடம் பெய்த கடும் மழை காரணமாக இந்தப் பகுதியில் அமைந் திருக்கும் மயானப் பகுதிக்கு அண் மையில் உள்ள குறித்த பாதையை மேவி வெள்ளம் பாய்ந்ததால் அந்த வீதியின் குறுக்கே பெரிய பள்ளம் ஏற்பட்டு தற்சமயம் வெள்ளம் பாயும் வாய்க்காலாக மாறி யுள்ளது.

## வீதியில் பாயும் 'காட்டாறு'

குறிப்பாக மாரி காலத்தில் பாயும் வெள்ளம் ஒன்று சேர்ந்து காட்டாறு போல இந்தப் பகுதிப் பாதையை மேவி பாயும் நிலை சுமார் 3 மாதங்கள் வரை நீடிக்கும். குறிப்பாக ஆனையிறவு, இயக்கச்சி, பளை, முகமாலை, எழுதுமட்டுவாழ், மிருசுவில், வரணி போன்ற இடங்களின் வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பரந்த தாழ்நில கண்டல் காட்டுப் பிரதேசங்களின் ஊடாகப் பாயும் வெள்ளநீர் இந்தப் பாதையை மேவி பாய்ந்து கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள பாலங்களின் ஊடாகப் பாய்ந்து அவை தொண்டமானாறு கடல் நீர் ஏரியுடன் சேர்கிறது. அதேசமயம் குறித்த இந்தப் பாதையின் நடுப்பகுதியில் உள்ள பாலம் ஒன்றின் மேலாகவும் மாரி காலங்களில் வெள்ளம் மேவிப்பாயும் நிலையும் உள்ளது. இந்தக் காலகட்டத்தில் இந்த வீதியின் ஊடாக வாகனப் போக்குவரத்து, சுமார் 3 மாதங்களுக்கு-வெள்ளம் வற்றும் வரையில்-தடைப்படும். அந்தக் காலகட்டத்தில் வாகனப் போக்குவரத்து கொடிகாமம் புலோலி பாதையூடாக வல்லிபுரம் செல்லும் பாதைக்குச் சென்று மீண்டும் பருத்தித்துறை மருதங்கேணி ஊடாக வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் செல்லும் வகையில்அமையும். இது நீண்ட தூர பயணப் பாதையாகும்.

## பாதையின் முக்கியத்துவம்

இந்தப் பாதை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தையும் தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தையும் இணைக்கும் தூரம் குறைந்த பாதையாகும். வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களான பொற்பதி, குடத்தனை, அம்பன், மணல்காடு போன்ற பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் சரி, தென்மராட்சி கிழக்கு பிரதேசங்களான வரணி, கொடிகாமம், மிருசுவில், மீசாலை, சாவகச்சேரி, மந்துவில் போன்ற பிரதேசங்களில் வதியும் மக்களும் சரி தமது தேவைகளுக்கு மேற்குறித்த இரு பிரதேசங்களுக்கும் பயணிப்பது இந்தப் பாதையூடாகவே ஆகும்.

மேலும் தற்சமயம் வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக மக்கள் புழக்கம் கூடுதலாக உள்ளது. இந்த நிலையில் தென்பகுதியில் இருந்து பல வியாபார வாகனங்கள், இராணுவ வாகனங்கள், பாதை புனரமைப்பு தொடர்பில் கல் ஏற்றிவரும் 'டிப்பர்' வாகனங்கள், கொழும்பு பிரதேசங்களில் இருந்து மீன் கொள்வனவுக்காக வரும் குளிரூட்டி வாகனங்கள் என நாளாந்தம் பல வகைப்பட்ட வாகனங்கள் இந்தவீதியாலேயே பயணிக்கின்றன.

## அவசிய புனரமைப்பு வேலைகள்

குறித்த மயானம் அமைந்துள்ள பகுதிப் பாதையில் இருந்து நடுப் பிரதேசத்தில் உள்ள பாலம் வரை மண் போடப்பட்டு உயர்த்தப்பட்டு மீண்டும் கற்கள் இடப்பட்டு தார் இடப்பட்டு பாதை புனரமைக்கப்படல் வேண்டும். அதாவது பாதையின் மட்டம் சுமார் 3 அடி வரை உயர்த்தப்படல் வேண்டும். இந்தப் பகுதியில் தற்சமயம் வெள்ளவாய்க்காலாக மாறியுள்ள பகுதியில் புதிதாக ஒரு பாலம் கட்டப்படல் வேண்டும். இதன்போது காட்டாற்று வெள்ளம் இதனூடாக பாயும் நிலையுண்டு. இதன் மூலம் உரிய பாதை கட்டுமானம் பழுதடையாமல் நீடித்து நிலைக்கும் தன்மை ஏற்படும். இந்தப் பகுதியை வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிடல் வேண்டும்.

குறித்த பாலப் பகுதியில் இருந்து சுமார் 500 மீற்றர் வரையான பகுதி உயரமாக அமைந்துள்ள கற் பாதையாக இருப்பினும் அந்தப் பகுதி தற்சமயம் கற்கள் அகற்றப்பட்டு வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை உள்ளது. இந்தப் பிரதேசமும் கற்கள் இடப்பட்டு மட்டப்படுத்தப்பட்டு தார் இடப்பட்டு புனரமைக்க வேண்டும். மிகுதிப் பகுதியான சுமார் 500 மீற்றர் வரை ஆறாம் கட்டைப் பகுதி மண் பாதையாக காட்சியளிப்பதுடன் பாதையின் நடுவில் பெரும் குழிகள் ஏற்பட்ட நிலையில் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது. எதிரெதிரே வரும் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திப் பயணிக்க முடியாத வகையில் பாதை ஒடுக்கமாக உள்ளதாலும், பாதையின் இரு மருங்கிலும் நொச்சிமரங்கள் அடர்த்தியாக வளர்ந்துள்ளதாலும், வாகன விபத்துக்களுக்கு வாய்ப்பு அதிகரிக்கிறது. இந்தப் பகுதி மண் போடப்பட்டு சுமார் 3 அடிவரை உயர்த்தப்பட்ட பின்பே கல், தார் இடப்பட்டு பாதை புனரமைக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட விடயங்களை வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி கள் சரி, தற்சமயம் புதிதாக பதவி ஏற்ற உரிய விடயத்துக்கு பொறுப்பான மாகாண அமைச்சர் சரி சீர் தூக்கி ஆராய்ந்து குறிப்பிட்ட பாதையைப் புனரமைப்பதில் முன்னுரிமை கொடுத்து ஆவன செய்ய வேண்டும் எனப் பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஓ)

# இடமாற்ற மேன்முறையீடு பதில் அனுப்பாது இழுத்தடிப்பு

## விசனம் தெரிவிக்கின்றனர் முல்லைத்தீவு ஆசிரியர்கள்



உலக உளவள நாள் நிகழ்வு இடைக்காடு மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.க்ல்வி வலய வழிகாட்டலும், ஆலோசனையும் பிரிவு முதன்மை ஆசிரியர் திருமதி ஈ.ஜே.புத்திசிகாமணி 'உளநலமும் முதியோரும்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். (வ-9)

புதுக்குடியிருப்பு, நவ.5

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் வெளி மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்ற மேன்முறையீட்டு விண்ணப்பங்களுக்கு இதுவரை பதில் எவையும் அனுப்பாது முல்லைத்தீவு கல்வி வலயத்தினர் இழுத்தடிப்புச் செய்வதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

2005 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் இங்குள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு வந்த வெளி மாவட்டங்களைச் சேர்ந்த குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களைத் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விடாது ஏதேதோ காரணங்களைக் கூறி இடமாற்றத்தை இரத்துச் செய்யும் அதிகாரிகள் தாம் மேன்முறையீடு செய்த விண்ணப்பத்துக்கும் எந்தவித பதிலும் அனுப்பாது காலம் தாழ்த்துவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச சுற்றறிக்கையில் கூறியுள்ளதன் பிரகாரம் கஷ்டப் பிரதேசத்தில் 4 வருடங்களும் , அதிகஷ்டப் பிரதே சத்தில் 3 வருடங்களும் கடமையாற்றினால் இடமாற்றம் வழங்க முடியும் என்பதை எந்த அதிகாரியும் கவனத்தில்கொள்வதில்லையெனவும், தமக்குப் பின்னர் இரண்டு வருட ஒப்பந்தத்தில் வந்த ஆசிரியர்கள் மீளவும் தமது சொந்த இடங்களுக்கே இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர் எனவும் இவர்கள் கூறுகின்றனர்.

அத்துடன் தீவகக் கல்வி வலயத்தில் 3 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் 5 வருடங்கள் கடமையாற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது எந்த விதத்திலும்நியாயம்இல்லை எனவும் பாதிக்கப்பட்ட இந்த ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். புதிதாக வந்த மாகாணக் கல்வி அமைச்சர் தங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தரமாட்டாரா என்று இங்குள்ளவர்கள் ஏக்கத்துடன் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-20)

## விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கான

## பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.5

வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. இரு பிரதேசங்களிலும் 30 விவசாய ஆராய்ச்சியாளர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ஒவ்வொரு பிரிவுகளிலும் 2 விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். குறிப்பிட்ட முழு தற்போது 15 பிரிவுகளுக்கு ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

"-"

**இரு பிரதேசங்களிலும் 30 விவசாய ஆராய்ச்சியாளர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ஒவ்வொரு பிரிவுகளிலும் 2 விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.**

இவற்றை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-7)

## நிறைவு பெற்றன கூட்டங்கள்

முல்லைத்தீவு, நவ.5

ஒட்டுசுட்டானில் கால போகத்துக்கான விவசாயக் கூட்டங்கள் நிறைவு பெற்றுள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழுள்ள 4,000 ஏக்கர் காணிகளுக்கும் 60 சிறிய நீர்ப்பாசன குளங்களுக்குக் கீழுள்ள காணிகளுக்குமான கால போக விவசாயக் கூட்டங்கள் முடிவுற் றுள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் ரி.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி கற் சிலைமடு பெரிய குளத்துக்கான காலபோக விவசாயக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கமக்கார அமைப்புக்கள் திறமையுடன் செயற்பட வேண்டும். ஏனைய இடங்களுடன் ஒப்பிடும்போது கற்சிலைமடு கமக்கார அமைப்பின் செயற்பாடுகளில் தொய்வான நிலையே காணப்படுகிறது. எனவே திறந்த மனதோடு சமூக நலன் கருதி இவை மக்களுக்குச் சேவையாற்றுவதே சிறந்த பயனை அளிக்கும் எனத் தெரிவித்தார். (க-500)

## இன்றைய நாள்

தருவது வித்தியா

**உங்களுக்கு எப்படி?**

**மேடம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். எதிலும் கவனமுடன் செயற்படுங்கள்.

**இடபம்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். இளவயது நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டு பெறுவீர்கள்.

**மிதுனம்:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும்.

**கடகம்** : சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப் படுத்துவீர்கள்.

**கன்னி:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**நாளை**

ஐப்பசி-20 புதன்கிழமை 06.11.2013
திதி: திருதியை பி.ப.01.43 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.இ.08.53 வரை
சுபநேரம்: 04.35 - 06.05 வரை
இராகுகாலம்: 12.05 - 01.35 வரை

**துலாம்:** சிறு சிறு அவமானங்கள் ஏற்படக் கூடும். செய்நன்றி மறந்த மனிதர்களை நினைத்து அவ்வப்போது வருந்துவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும்.

**தனுசு:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** நண் பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள்.

**கும்பம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மீனம்:** முன்கோபத்தைக் குறையுங்கள். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

## சுடோக்கு

**எண் விளையாட்டு**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 2 | | | 9 | | 8 | |
| | 7 | | 3 | | | | | 2 |
| | | 3 | | 8 | 5 | | | |
| | 8 | 5 | 9 | | 4 | | | |
| | 9 | 1 | 6 | | 7 | 8 | 4 | |
| | | | 5 | | 8 | 1 | 9 | |
| | | | 8 | 5 | | 6 | | |
| 8 | | | | | 6 | | 7 | |
| | 5 | | 4 | | | 9 | 1 | |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 2 | 7 | 4 | 9 | 3 | 8 | 1 |
| 9 | 7 | 8 | 3 | 6 | 1 | 4 | 5 | 2 |
| 1 | 4 | 3 | 2 | 8 | 5 | 7 | 6 | 9 |
| 6 | 8 | 5 | 9 | 1 | 4 | 2 | 3 | 7 |
| 2 | 9 | 1 | 6 | 3 | 7 | 8 | 4 | 5 |
| 4 | 3 | 7 | 5 | 2 | 8 | 1 | 9 | 6 |
| 7 | 1 | 9 | 8 | 5 | 3 | 6 | 2 | 4 |
| 8 | 2 | 4 | 1 | 9 | 6 | 5 | 7 | 3 |
| 3 | 5 | 6 | 4 | 7 | 2 | 9 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## இறக்குமதி வரி அதிகரிப்பினால் மோ.சைக்கிள் விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, நவ.5

மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதிக்கான வரிகளை அரசு அதிகரித்துள்ளதால் அதன் கொள்வனவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மோட்டார் சைக்கிள் இறக்குமதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களின் வரியை அதிகரிப்பதற்கு அரசு தொடர்ந்தும் முயற்சிக்குமானால் அதன் இறக்குமதி முற்றாகத் தடைப்படும் எனவும் அந்த நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அரசு வெளியிடவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மோட்டார் சைக்கிள் இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்படலாம்.



நாடொன்றின் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி அடையாத சூழ்நிலையில், கீழ் மட்டத்தில் உள்ளோர் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிளின் வரியை உயர்த்துவதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவார்கள்.

அது மட்டுமல்லாது எதிர்காலத்தில் மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்வதற்கு முன்வரமாட்டார்கள்.

இதனால் இறக்குமதியில் பெரிய வீழ்ச்சி ஏற்படும் எனவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (கு-400-22)



ஜேர்மனி, சுவிஸ் நாடுகளுக்கான டொச் மொழி வகுப்புகளை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கடந்த 7 வருடங்களாக திருமதி கஜேந்தினி நடத்தி வருகிறார். இல.101, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தமிழ் மொழி பெயர்ப்புடனும் இந்த வகுப்புகள் நடைபெறுகின்றன. (கு)

### மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை

## சிறுவர் சேமிப்புக்கு ரூ.2 லட்சம் ஒதுக்கீடு

தென்மராட்சி, நவ.5

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் 90க்கும் மேற்பட்ட முன்பள்ளிகளில் கற்கும் 2 ஆயிரம் வரையிலான சிறார் களுக்கு மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை சேமிப்புக் கணக்குகளை தனது செலவில் ஆரம்பிக்க 2 லட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

பிறந்த குழந்தை தொடக்கம் முதியோர் வரை பல்வேறு சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது மக்கள் வங்கி.

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் சர்வதேச சிறுவர் தின விழாவுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மக்கள் வங்கியினர் கல்விப் பணிக்காக பல்வேறு செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

மாணவர்களின் முன்பள்ளிப் பருவம், தரம் 1 இல் இணைக்கும் கால்கோல் விழா ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தி பெறுவோரைக் கௌரவிப்பது, பாடசாலைகளில் நடைபெறும் நலனோம்புத் திட்டங்களை ஊக்குவிப்பது போன்றவை மக்கள் வங்கி கல்விச் சமூகத்துக்குசெய்யும்நற்பணிகளாகும். ஆசிரியர்களுக்கான சம்பளம் வங்கிகளில் வழங்கப்பட வேண்டுமெனகல்விஅமைச்சினால் அறிவிக்கப்பட்ட போது அந்தத் திட்டத்தை முதலில் ஏற்றுக்கொண்ட மக்கள் வங்கி ஆசிரியர்களுக்கு கடன் வழங்கும்திட்டத்தையும் நடைமுறைப் படுத்தியது. நகரை விட்டு நகர்வதற்கு வங்கிகள் மறுத்த நிலையில் கிராமிய மக்களின் பொருளாதார வாழ்வாதாரத் தினை மேம்படுத்த கிராமப் புறங்களில் வங்கிகளை நிறுவி சிறந்த சேவையை மக்கள் வங்கி வழங்கி வருவது பாராட்டுதற்குரியது- என்றார். (கு-9)

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

## பராலிம்பிக் பங்காளராக இணைகிறது அலியான்ஸ்

காப்புறுதி பெரிய இணைப்பு நிறுவனமான அலியான்ஸ், முற்று முழுதான உரித்துடனான அலியான்ஸ் லங்கா மற்றும் இலங்கையின் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய விளையாட்டு சம்மேளனத்தின் ஊடாக சர்வதேச பராலிம்பிக் குழு (IPC) வின் பங்காளராக உள்வாங்கப்படவுள்ளது. உள்நாட்டில், பராலிம்பிக் அமைப்பின் அலியான்ஸ் வலைப் பின்னலுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் 70 நாடுகளில், 9 ஆவது நாடாக இலங்கை மேம்படவுள்ளது.

2006 ஆம் ஆண்டு முதல் சர்வதேச பராலிம்பிக் அமைப்பு, மெய்வன்மைப் போட்டிகள், அதன் பெறுமதி மற்றும் எண்ணங்கள் குறித்து, சர்வதேச பராலிம்பிக் குழு (IPC) மற்றும் ஜேர்மன் தேசிய பராலிம்பிக் சபை என்பன அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன. அலியான்ஸ்இன் சர்வதேச பராலிம்பிக் குழுவின் IPC முதலாவது பங்காளராகவும் ஆஸ்திரேலியா, பல்கேரியா, குரோஷியா, செக் மக்கள் குடியரசு, ஹங்கேரி, அயர்லாந்து, ஜேர்மனி, போர்த்துக்கல், சுவிஸ்சர்லாந்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் உள்ள தேசிய பராலிம்பிக் குழுக்களின் தேசிய ஆதரவாளராகவும் செயற்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தத்தை சர்வதேச பராலிம்பிக் குழு, 2016 ஆம் ஆண்டு வரைக்கும் நீடித்திருக்கிறது.

இது தொடர்பில் அலியான்ஸ் நிறுவனத்தின் சர்வதேச சந்தைப்படுத்தும் முகாமைக் குழுமத்தின் தலைவர் ஜோ குரொஸ் கருத்துரைக்கையில், எமது பங்காளித்துவம், நன்மை பயனளிக்கக் கூடியது என குறிப்பிட்டுள்ளார். அத்துடன் எமது பங்காளித்துவம் மூலம் உங்கள் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டு பராலிம்பிக் போட்டியாளர்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றும் திட சங்கற்ப தடைகளுக்கு அப்பால் இட்டுச் செல்கின்றது. நாங்கள் எங்கள் அனுபவங்களைக் கொண்டு வரையறைக்கு உட்பட்ட அவர்களின் திறமைகளை ஊக்குவிக்கின்றோம். அத்துடன் மக்கள் மத்தியில் எமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறோம். இதன் அடிப்படையிலேயே இலங்கையின், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய விளையாட்டு சம்மேளனத்துடன் எமது பங்காளித்துவம் அமைகிறது.- என்றார்.




அலியன்ஸ் லங்கா நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி சுரேக்கா அலீஸ் தகவல் தருகையில், இலங்கையின் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய விளையாட்டு சம்மேளனத்துடன் பங்காளித்துவத்தை ஏற்படுத்திக் கொண்டதற்காக அலியான்ஸ் லங்கா பெருமைப்படுகிறது. எமது பங்காளித்துவத்தின் மூலம் பராலிம்பிக் போட்டியாளர்கள், எமது நிறுவன பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையில் அர்த்தமுள்ள இணைப்பு ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் பராலிம்பிக் போட்டியாளர் மத்தியில் அவர்களது நோக்கத்தை நிறைவேற்றி தங்களின் திறமைகள் மீது அவர்களே நம்பிக்கை கொள்ளும் வகையில் அலியான்ஸ் ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பராலிம்பிக்கிற்கும் அலியான்சிற்கும் இடையில் சுகாதாரம், புனர்வாழ்வு, ஒருங்கிணைப்பு போன்ற விடயங்களிலும் அலியான்ஸ் எங்களது வாடிக்கையாளர்களுக்கு உலகளாவிய ரீதியில் உதவிகளை வழங்கவுள்ளது.

அலியான்ஸ் லங்கா இலங்கையின் பராலிம்பிக்ஸ் அமைப்புக்கு நிதி மற்றும் நிதியல்லாத ஆதரவினை வழங்கவுள்ளது. இதன் முதல் கட்டமாக அலியான்ஸ் சர்வதேச பராலிம்பிக் குழுவுடன் இணைந்து இலங்கையில் பராலிம் பிக் இன் நிர்வாக திட்டங்களுக்கு உதவும் வகையில் பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளது. அத்துடன் இலங்கையின் மாற்று திறனாளிகளுக்கான தேசிய சம்மேளனத்தின் 2016 ஆம் ஆண்டு ரியோ வசந்த கால போட்டிக்கு ஆயத்தங்களையும் அலி யான்ஸ் ஆதரவு வழங்க வுள்ளது.

இந்த அறிவித்தல் தேசிய மாற்று திறனாளிகளுக்கான விளையாட்டு சம்மேளனத்தின் நிறைவேற்று சபை உறுப்பினர்கள் மற்றும் இலங்கையின் 30 பராலிம்பிக் போட்டியாளர்கள் அலியான்ஸ் தலைவர் பிரிகேடியர் ராஜத ஹம்பேமுகட்டியை வரவேற்ற நிகழ்வின் போது வெளியிடப்பட்டது.

## நினைவழியா நான்காம் ஆண்டு



வாழ்வாய் 21 - 08 - 1976

வரலாறாய் 05 - 11 - 2009

உன் தூரிகைக்கும் கற்பனைக்கும்
முடிவு வந்து நான்காண்டோ!
காலன் முடிவைக் கூட - உன்
தூரிகையால் தந்தவனே - நம்
நிஜம் எல்லாம் இன்று
நிழலாகிப் போனதுவே.

**ஜேசுதாசன் பயஸ்ராஜா**
(ஓவியர் - ஆசிரியர்)

நினைவுடன்,
குடும்பத்தினர்
மனைவி(காயா), மகன் (யதி).


## சமய சந்நிதிகளில்

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி கோயில் கந்தசஷ்டி பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. விழா தொடர்ந்து 6 தினங்கள் நடை பெறும்.

இந்தப் பெருந்திருவிழாவில் சிறப்புத் திரு விழாக்களான தாரகன் போர் 6 ஆம் திகதி புதன்கிழமையும், சிங்கன் போர் 7 ஆம் திகதி வியாழக்கிழமையும், சூரன் போர் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், தீர்த்தத்திரு விழாவும், கொடி இறக்கமும் மறு நாளான 9 ஆம் திகதி சனிக்கிழமை முறையே காலை 9 மணிக்கும், மாலை 6 மணிக்கும் இடம் பெறும். (ந-8)

♦♦♦

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி ஆலய கந்தசஷ்டித் திருவிழா நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

தினமும் காலைப் பூசையைத் தொடர்ந்து கந்தபுராண படனம் இடம்பெறும். எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சூரசங்ஹாரம் இடம்பெறும். (ந)

♦♦♦

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை கந்தசஷ்டி பூசைகள் ஆரம்பமாகின. சனிக்கிழமை திருக்கல்யாண வைபவத்துடன் நிறைவுபெறும். இந்த ஆறு நாள்களும் தினமும் மாலை 7 மணிக்கு தெய்வீக இசைச் சொற்பொழிவு 'கந்தன் கருணை' என்னும் பொருள் பற்றி கதா வாரிதி முத்தமிழ் அருவி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்படும். (ந)

♦♦♦

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் கந்தசஷ்டி உற்சவம் கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சூரசங்ஹாரமும் இடம்பெறும். (ந-17)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11★09★1952 மறைவு 28★10★2011

அமரர்
**தம்பையா கணேசமூர்த்தி**
(பத்தர்-சுருவில் கணேஸ்)

திதி:05.11.2013

இமைகள் மூடித் திறப்பதற்குள்
ஆண்டுகள் இரண்டு கடந்ததுவே!
நாம் வாழும் நாள்களில் உங்கள்
நினைவுகள் எம்முடன் வாழும்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
82, சீனியர் ஒழுங்கை, கலட்டி

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அவனியில் 08.10.1942

அரனடியில் 08.11.2010

திதி : துதியை

அமரர் **சின்னத்தம்பி தேவராசா**

ஆறாறு மாதங்கள் அகன்று விட்டனவோ
ஆறவில்லையப்பா எங்கள் மனம்
நினைவழியா உங்கள் நினைவுத் தடயங்கள்
நித்தமும் எம்மைக் கலங்க வைக்குதப்பா
நிழல் படத்தில் உங்கள் நிஜவதனம் தேடுகின்றோம்
மீண்டும் ஒருமுறை இவ்வுலகில் வருவீரோ?
மாண்டு மடிகின்றோம் உங்கள் வரவுக்காய்.

நாச்சிமார் கோயிலடி,
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

(33346) (7.6.3)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 14★10★1988

ஆண்டவன் அடியில் 05★11★2010

அமரர்
**அருளீஸ்வரன் நர்சுதன்**
(ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3 ஆம் வருட மாணவன்)

மகனே அன்புச் செல்வமே!
ஓர் ஆண்டென்ன ஈராண்டென்ன மூவாண்டென்ன
எத்தனை ஆண்டுகள் போனாலும்
எங்கள் உயிர் உள்ள வரை உன் நினைவாகவே இருப்போம்
எங்கள் கண்ணீர்க் காணிக்கையை
உன் பாதத்தில் வைத்து ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கோப்பாய்வீதி,
(சந்திக்கு அருகில்)
உரும்பிராய்.

எப்போதும் உன் பிரிவை நினைத்து வருந்தும்
அப்பா, அம்மா, தங்கை, மச்சான், மருமக்கள்.

(39694) (3.6.4)

# ஈரவிழிகளுடன் ஈராண்டு போனதே

கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி சறோஜினிதேவி சிவஸ்கந்தா**
[ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் - ஸ்ரீலங்கா ரெலிக்கொம்]





பனிதேசம் வந்தும்
பனிக்கின்றன கண்கள்
பக்கத்தில் பலர் இருந்தும்
பாசத்தாய் இல்லாமல்
பார்வைகள் வெறுமையாய்
பல்லாண்டு சென்றாலும்
எம் பந்தம் நீர் தானே அம்மா
எப்பாதை சென்றபோதும்
அப்பாதை வந்த அம்மா
பரமனிடம் போன பாதை
பார்வைகளுக்குத் தெரியவில்லையே!
பாழாய்ப்போன நோய்வந்து
பாசக்கயிறு போட்டுவிட்டான்
பாவிக்காலனவன்
பாதி டசின் பிள்ளைகள் பார்த்திருக்க
பாதியிலே பறித்துவிட்டான்
பரலோகப் பாதை தெரிந்துவிட்டால்
பாய்ந்துமே வந்திடுவோம்
எங்கள் பாசக் கடவுளிடம்
பார்த்து வழிநடத்திடுவீர்
எம் துயரினைத் தீர்த்திடுவீர்.

தோற்றம் 14 - 09 - 1941

மறைவு 28 - 10 - 2011

திதி: துதியை (05.11.2013)

என்றும் நினைவில்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(39720) (7.6.3)

## வவுனியா நகர சபையின் இரண்டு நிகழ்வுகள் இன்று

வவுனியா நகர சபையினரால் நடத்தப்படும் உள்ளூராட்சி வார மற்றும் தேசிய வாசிப்பு நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு செயலாளர் தலைமையில் வவுனியா நகர கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. வட மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் பி.சத்தியலிங்கம் இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், வட மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலை வர்கள் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி யீட்டிய மாணவர்களுக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும், பரிசில்கள் வழங்கப்படவுள் ளன. மேலும் நீண்ட காலமாக நூல்நிலைய வாசகர்களாக இருப்பவர்கள் கௌரவிக்கப்படுவார்கள். அத்துடன் சிறந்த உணவகங்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் கலை நிகழ் வுகளும் இடம்பெறவுள்ளன. (க-402)

## வவுனியாவிலும் ஆரம்பமானது அதிவிரைவு தபால் சேவை

வவுனியா, நவ.5

வவுனியாவில் அதிவிரைவு தபால் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மிக விரைவாக தபால்களைக் கிடைக்கச் செய்வதற்காக அதிவிரைவு தபால் சேவை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வவுனியாவிலும் உத்தியோக பூர்வமாக அதிவிரைவு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.




பிரதேச அஞ்சல் அதிபதி நாயகம் என்.ரட்ண சிங்கம் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்;

எமது திணைக்களத்தின் மற்றுமோர் முயற்சியாக தபால்களை உடனடியாக கிடைக்கச் செய்யக் கூடியதாக அதிவிரைவு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமக்கு இரண்டு வாகனங்க்ள் இந்த நடவடிக்கைக்கென வழங்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று யாழ்ப்பாணம் செல்லும். இது வட மாகாணத்துக்குரிய தபால்களை விநியோகிக்கும். ஏனையது தம்புள்ளைக்கும் சென்று தபால்களை ஒப்படைக்கும். தென் பகுதிக்குரிய தபால்களை தம்புள்ளைப் பகுதியில் வைத்து சேகரிப்பதனால் அங்கு சென்று எமது வாகனம் தபால் விநியோகத்தை மேற் கொள்ளும்.

இதன் மூலம் தபால் விநியோகத்தில் ஏற்படும் தாம தங்களைக் குறைக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவையில் பிரதேச அஞ்சல் அதிபதி நாயகம் என்.ரட்ண சிங்கம், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எம்.ஜி. அல்ஹா சல்ஹாது மற்றும் வவுனியா அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்திலும் இந்த அதிவிரைவு தபால் சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே. (க-421)



## நல்லூர் பிரதேச சபை,கொக்குவில்
## 2014ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், என்பவற்றை 2014ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 20.11.2013ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணி வரை நல்லூர் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தலைவர், நல்லூர் பிரதேசசபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 19.11.2013ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக்கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 28.11.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2014 ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| தொ. இல. | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (வற் வரி தவிர்ந்த) ரூபா |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1 000.00 | 15 000.00 | 17,490,000.00 |
| 2. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5 000.00 | 220,000.00 |
| 3. | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக் கடை இல. 1 | 500.00 | 5 000.00 | 386,210.00 |
| 4. | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக் கடை இல. 2 | 500.00 | 5 000.00 | 275,330.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1 000.00 | 10 000.00 | 827 420.00 |
| 2. | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 5 000.00 | 330 550.00 |
| 3. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5 000.00 | 110 110.00 |
| 4. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5 000.00 | 413 600.00 |
| 5. | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5 000.00 | 57 200.00 |
| 6. | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக்டையும் | 500.00 | 5 000.00 | 132 000.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக இல.329,பலாலி வீதி, ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5 000.00 | 179 300.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
04.11.2013

(ச/13548)(5.6)

ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.


## கலந்துரையாடல்

வடமராட்சி கல்வி வலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடை பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலுக்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா வருகை தரவுள்ளார்.

கலந்துரையாடலில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், வலயக் கல்வி அலுவலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-35)

## செல்வச் சந்நிதியில் சிறப்புச் சொற்பொழிவு

வடமராட்சி, நவ.5

கந்தசஷ்டி விரத காலத்தையொட்டி சந்நிதி கோயிலில் தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறும் கந்தசஷ்டி பூசை முடிவுற்றதும் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெற்று வருகின்றன.

நேற்று திங்கட்கிழமை 'திருஅவதாரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெற்றது.

இன்று செவ்வாய்க்கிழமை 'திருவிளையாடல்' என்னும் தலைப்பிலும், நாளை புதன்கிழமை 'சூரசம்ஹாரம்' என்னும் தலைப்பிலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை 'தெய்வயானை திருமணம்' என்னும் தலைப்பிலும் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

சொற்பொழிவை இரா.செல்வவடிவேல் நிகழ்த்தி வருகின்றார். (ஒ-8)

## மாற்றங்கள் வரும் ஆண்டாக ஹிஜ்ரி 1435 பிறக்கட்டும்
### புதுவருடச் செய்தியில் அஸ்மின்

யாழ்ப்பாணம், நவ.5

முஸ்லிம் உம்மத் மக்காவிலிருந்து மதீனா நோக்கி ஹிஜ்ரத் மேற்கொண்ட இம் மாதமே இஸ்லாமிய புதுவருடத்தின் முதல் மாதமாக அமைய வேண்டும் என நபிகளாரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கலீபாக்கள் தீர்மானித்தனர். இந்த நாளில் நல்ல மாற்றங்கள் உருவாகும் ஆண்டாக இந்த ஹிஜ்ரி ஆண்டு அமைய வேண்டுமென பிரார்த்திப்பதாக வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் தெரிவித்தார்.

இன்றைய இஸ்லாமிய புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்;

அவரது புதுவருடச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

**இன்றைய காலத்தில் எமது சமூகம் பல சவால்களுக்கு முகம்கொடுக்கின்றது.**

இதனை ஒரு கொண்டாட்டமாக இஸ்லாமிய சமூகம் அடையாளப் படுத்துவதில்லை. நற்சிந்தனைகளை பகிர்ந்து கொள்வது ஆண்டின் தொடக்கத்தில் பயனுள்ளதென எதிர்பார்க்கின்றோம்.

ஹிஜ்ரி 1435 இன்று ஆரம்பமாகின்றது. இன்றைய காலத்தில் எமது சமூகம் பல சவால்களுக்கு முகம்கொடுக்கின்றது. இவ்வேளையில் வினைத்திறனுடன் கூடிய ஓர் அணியினர் அவசியமாகின்றனர். அவர்களின் வருகைக்காக இந்தத்தேசமும் எமது சமூகமும் எதிர்பார்த்துள்ளன -என்றுள்ளது. (ஒ-10)

## உயிரைப் பறித்தது மது போதை

தீபாவளி தினத்தன்று மதுபோதையில் மனைவியுடன் சண்டை பிடித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிறு காலை வீட்டுப் பின்புறமுள்ள வேப்ப மரத்தில் சேலையால் கழுத்தில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவரது சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. விசாரணைகளை பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா மேற்கொண்டார். பருத்தித்துறை பொலிஸார் சாட்சிகளை முன்னிலைப்படுத்தினர்.

வீட்டை விட்டு வெளியேறிய இறந்தவர், அனைவரும் நித்திரைக்குச் சென்றதும் வீட்டின் பின்பக்கம் சென்று மனைவியின் சேலையை வேப்ப மரத்தில் கட்டித் தூக்கிட்டுத் தொங்கியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் மேற்கொண்ட உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ரு-8)

## கிளிநொச்சி வலய மட்ட வணிகப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, நவ.5

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் வணிகத்துறை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வணிகப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பேர் வருமாறு:-

**தரம் 10 (பிரிவு-I) பேச்சு**

சி.கபிஷாந்-பிரமந்தனாறு ம.வி, பா.அட்சிகா -புனித திரோசா பெண்கள் கல் லூரி, இ.யாழரசி -கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**கட்டுரை**

ந.அகல்யா -முழங்காவில் ம.வி., சு.லிவிதா -கிளிநொச்சி ம.வி., நா.சுதர்சினி-தருமபுரம் ம.வி.

**குறு வினாவிடை**

பா.அட்சிகா -புனித திரேசா பெண்கள் கல்லூரி, கே.திவாரகா-பளை மத்திய கல்லூரி, ச.வில்வரசன் -பிரமந்தனாறு ம.வி

**தரம்-11 (பிரிவு II) பேச்சு**

க.பவித்திரா -கிளிநொச்சி ம.வி., சே.உதயன்-பாரதி வித்தி., தி.கபிலா -கறுக் காய்த்தீவு ம.வி.

**கட்டுரை**

உ.நிதர்சன் -பூநகரி ம.வி., க.தன்ஷகா -பளை மத்திய கல்லூரி, க.கிருஷாயினி -தருமபுரம் ம.வி.

**குறு வினாவிடை**

நா.கேசவராஜ் -கிளிநொச்சி மத்திய கல்லூரி, அ.ஆன் நிலக்சனா -பளை மத்திய கல்லூரி, இ.ஜெயந்திரன் -பாரதி வித்தி.

**தரம்-12,13(பிரிவு III) பேச்சு**

அ.புனிதா-கனகபுரம் ம.வி., மோ.அனுசாயினி -அக்கராயன் ம.வி., ம.கேசனா -கிளிநொச்சி ம.வி.

**கட்டுரை**

மு.கயல்விழி -கிளிநொச்சி மத்திய கல்லூரி, தி.தயந்திகா- முருகானந்தாக் கல்லூரி, த.சுதர்சன்-பூநகரி ம.வி.

**குறு வினாவிடை**

இ.சுஜித்தா-தருமபுரம் ம.வி., அ.புவீந்திரன் -கிளிநொச்சி ம.வி., சு.கிருஷா - பளை மத்திய கல்லூரி. (ஓ-405

## விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையால் நடத்தப்பட்டு வரும் அலுமினியம் பொருத்துதல் தொழிற்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாத இறுதிக்குள் தங்கள் பதிவுகளைக் கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளரிடம் பதிவு செய்து கொள்ளலாம். (ந)

## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 20.09.1983 மறைவு 06.10.2013

அமரர்

**துரைசிங்கம் யஜிதரன்**

*வாழ்வு நிலையில்லை மகனே*
*வாழ்ந்த உன் நினைவுகளுக்கு அழிவில்லை*
*காந்தம்போல் சகலரையும் ஈர்த்தாய்*
*நீ வருவாய் என விழிகளில் நீரோடு*
*காத்திருக்கின்றோம் மகனே.*

இன்று (05.11.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பத்தை வீதி,
மல்லாகம் தெற்கு, மல்லாகம்.

**துரைசிங்கம் குடும்பத்தினர்.**

(39700) (7.6.3)

## கண்ணீர் அஞ்சலி

இளவாலையிலே ஒரு பிரதேச வைத்தியசாலை அமைவதற்குத் தனது காணியை அன்பளிப்பாக வழங்கிய பெருந்தகை

**Dr.சற்குணநாயகம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச வைத்தியசாலை,
நோயாளர் நலன்புரிசங்கம்,
இளவாலை.**

(39729) (6.3.4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியையான திருமதி
**மொறின் மைக்கல்தாசன்**
அவர்களின் தாயார்
**திருமதி எட்விஸ் அமிர்தநாயகி அல்போன்ஸ் மாணிக்கராஜா**
அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(39542)(3.6.4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 20.08.1945 மறைவு 07.10.2013

கடந்த 07.10.2013 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

**சின்னத்தம்பி ஆனந்தவேல்**
(வெள்ளை)

யாழ்ப்பாணம் தொண்டமானாறு பெரிய கடற்கரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆனந்தவேல் (வெள்ளை) அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி ஆத்ம சாந்திக் கிரியைகள் எமது இல்லத்தில் நாளை(06.11.2013) புதன்கிழமை காலை 6.00மணியளவில் நடைபெறும் அக்கிரியைகளிலும் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது சகல வகையிலும் உதவிபுரிந்தோருக்கும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் அனைத்து வகையிலும் உதவி செய்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

7ஆம் கட்டை,பிரதான வீதி,
தொண்டமானாறு.

(29594)(5.6.3)

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**கந்தையா சுப்பிரமணியம்**
[மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி]

06.10.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா சுப்பிரமணியம் அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.11.2013) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து பலவழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் நேரிலும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரான்ஸ்

**மனைவி, பிள்ளைகள்.**

(39546) (7.6.3)

## மரண அறிவித்தல்

### ராமசாமி கிருஸ்ணசுந்தரம்
(சுந்தரம் கூல்பார் உரிமையாளர்)



யாழ்.கொட்டடி, சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ராமசாமி கிருஸ்ணசுந்தரம் 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமசாமி-கோவிந்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், துரைராசா-அன்னக்கிளி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், கோவிந்தராஜ் (பிரணவன் - யாழ் / இந்துக்கல்லூரி மாணவன்)இன் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஷண்முகசுந்தரம், வைரவசுந்தரம் மற்றும் விஜயலஷ்மி (இந்தியா), கனகேஷ்வரி (ரோகினி-கொழும்பு), காலஞ்சென்ற சிவசுந்தரம் மற்றும் யோகசுந்தரம் (கொழும்பு), ராமசுந்தரம் (கொழும்பு), பாலசுந்தரம் (இந்தியா), ஸ்ரீவரதலெச்சுமி (கனடா), ஸ்ரீகாந்தலெச்சுமி (இந்தியா), காலஞ்சென்ற வரதராஜசுந்தரம் மற்றும் ஸ்ரீதரன், சுபமாலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தா சந்திரன் (இந்தியா), ராஜாராம் (கொழும்பு), சுகுமாரன் (கனடா), மனோரஞ்சினி, கௌரிநாயகி (யா/மாநகரசபைM.O.H), சாரதாமணி, ஜெகதீஸ்வரி, (யா/நாவாந்துறை RCஆசிரியை), தவனேசன் (ஜேர்மனி), தீபா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜன், சுரேஸ், ரகுநாதன், ஹரீசின், கஜந்தி ஆகியோரின் சிறிய தந்தையும், பவனிகன், துளசி, கோபிகா ஆகியோரின் பெரியதந்தையும், சேரன் ஸ்டாலின், லல்லி, ராஜு, நிஷாந்த்குமார், சதீஸ் குமார், துஷான், கௌதம், பைரவி, மதுஷன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், மகேந்திரம், ஸ்ரீஆனந்தம், சிவகுமார் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப.12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டடி, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.

(39544) (12.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
# கேள்விஅறிவித்தல் – 2014

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக்கடை, இறைச்சிக்கடைகள் 2014.01.01ம் திகதி தொடக்கம் 2014.12.31ம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2013.11.05 – 2013.11.18 பி.ப 03.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2013.11.19 பி.ப 12.00 மணிவரை**

**கேள்வி திறக்கும் திகதி :- 2013.11.19 பி.ப 02.00 மணி**

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், வலிகாமம்மேற்கு பிரதேசசபை, சுழிபரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டுவருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சங்கான்ன மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ளவிரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒருவங்கியில் தங்கள் பெயரில் ரூபா 200.000.00க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கிப்புத்தகம் அல்லது வைப்புச்சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வங்கிப்புத்தகம் /வைப்புச் சான்றிதழ் கேள்வி திறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கிப் புத்தகம் /வைப்புச் சான்றிதழ் கேள்வித் தொகையின் 1/3பகுதியைஅலுவலகத்தில் செலுத்திஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.
3. பொன்னாலைசந்தை, பல்லசுட்டிசந்தை, வட்டுக்கோட்டை மாட்டிறைச்சிக் கடை என்பவற்றை குத்தகைக்கு எடுப்பவர்கள் இவற்றை நடத்துவதற்குரிய இடத்தினை தாமே தெரிவுசெய்தல் வேண்டும்.
4. உள்ளூராட்சிமன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகாக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3பகுதியை 25.11.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளவேண்டும்.
8. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
9. 01.01.2014முதல் சங்கானைமீன் சந்தையில் கோழிஉரித்தல் முற்றுகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மீன் வெட்டும் இடத்தின் தூய்மையை குத்தகைகாரர் பொதுசுகாதாரபரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
10. ஒப்பந்தகாரர குத்தகை ஏற்கும் போதுஉள்ள கட்டடத்தின் தரம்,கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக்காலம் பூர்த்தியடையும் போதுமீண்டும் அதேநிலையில் கையளித்தல் வேண்டும்.
11. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவரகள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல்வேண்டும்.
12. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4ம்,மீன் கிலோ ஒன்றிற்குரூபா 5.00ம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00ம், வியாபாரிகளின் பாவனையில் உள்ளபகுதியில் (மரக்கறிச் சந்தை,மீன் சந்தை,மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு ரூபா 30.00ம்துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக் கட்டணம் ரூ 5.00,மோட்டார் சைக்கிள் பாதுகாப்புகட்டணம் ரூபா 10.00 இனை அறவிடலாம். மேலதிகமாக எவ்விதகட்டணங்களும் அறவிடக்கூடாது.
13. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**2014 ஆம் ஆண்டுசந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப்பாது காப்பு நிலையத்துடன்) இறைச்சிக் கடைகள் கருவாட்டுக்கடைகள் | மாதவாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது. | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியகாட்டுச் சந்தை | | 900, 000.00 | 5000.00 | 1000.00 |
| 02 | பொன்னாலைச் சந்தை (மூளாய்) | | 464, 000.00 | 2000.00 | 500.00 |
| 03 | பல்லசுட்டிச்சந்தை | | 10,000.00 | 500.00 | 250.00 |
| 04 | தொல்புரம் மத்தியசந்தை | | 8,000.00 | 500.00 | 250.00 |
| 05 | சத்தியகாட்டு மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 13,200.00 | 500.00 | 250.00 |
| 06 | சத்தியகாட்டுஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 3300.00 | 500.00 | 250.00 |
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானைமரக்கறிச்சந்தை | | 5940.000.00 | 10000.00 | 1000.00 |
| 02 | சங்கானைமீன்சந்தை | | 1,100.000.00 | 5000.00 | 1000.00 |
| 03 | சங்கானைமாட்டிறைச்சிக்கடை | 200.00 | 359,000.00 | 5000.00 | 1000.00 |
| 04 | சங்கானைஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 50,000.00 | 2000.00 | 500.00 |
| 05 | சங்கானைகருவாட்டுக்கடை | 100.00 | 11,000.00 | 500.00 | 250.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | வட்டுக்கோட்டைபொதுச்சந்தை | | 70,000.00 | 2000.00 | 500.00 |
| 02 | சங்கரத்தைசந்தை | | 165,000.00 | 3000.00 | 750.00 |
| 03 | வட்டுக்கோட்டைமாட்டிறைச்சிக்கடை | | 17,500.00 | 2000.00 | 500.00 |
| 04 | கோழி இறைச்சிக்கடை,சங்கரத்தை | 100.00 | 19,800.00 | | |
| | **அராலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அராலிசெட்டியார் மடம் சந்தை | | 11.825.00 | 500.00 | 250.00 |
| 02 | வண்ணபுரம் தற்காலிகசந்தை | | 9.500.00 | 500.00 | 250.00 |

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்.**

**திருமதி நா. ஐங்கரன்,**
**தவிசாளர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்.**

# நோயாளர்களுக்கு பிரயாண கொடுப்பனவு

## கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில்

கிளிநொச்சி, நவ.5

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 21 நோயாளர்களுக்கு மருத்துவ தேவைக்கான பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் குறித்த நோயாளர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கவுள்ளனர்.

சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பின் பேரில் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் சு.ஜெயானந்தராசா குறித்த பிரிவில் உள்ள கிராம அலுவலர்களின் ஒத்துழைப்புடன் நோயாளர்களின் நிலைமைகள் தொடர்பாக நேரில் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் தகுதியான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இந்தக் கொடுப்பனவுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

குறித்த பயனாளிகள் மருத்துவ தேவைக்காக யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, கண்டி ஆகிய அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறச் செல்வதற்கான பிரயாணச் செலவாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் த.முகுந்தன் அறிவித்துள்ளார்.

(வ-9)

**தேவை**

கொழும்பில் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலையுடன் பிள்ளையை பராமரிக்கக் கூடிய நடுத்தர வயதுடைய பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
**தொ.பே. 077 6002133**

## கண்ணீர் அஞ்சலி



**வல்லிபுரம் நாகமணி**

எமது பாடசாலையின் கணித ஆசிரியர் திரு.நா. தவேந்திரராசா அவர்களின் அன்புத் தந்தை வல்லிபுரம்- நாகமணி இறைவனடி சேர்தலையிட்டு ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் கல்விசாரா உத்தியோகத்தர்
திருமதி குவனேஸ்வரன் தவராணியின்
அன்புத் தாய்
திருமதி
**சிவனேஸ்வரி சிதம்பரப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(C 13553.14.17)

## மரண அறிவித்தல்

**திருமதி செல்லம்மா செல்லையா**



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லையா நேற்று முன்தினம் (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு -இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் (சிங்கப்பூர் போசனசாலை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனக லிங்கம் ஜெயலக்ஷ்மி மற்றும் குணரத்தினம் (ஜேர்மனி), இந்திராணி (ஜேர்மனி), சறோஜினிதேவி (ஜேர்மனி), சாந்தகுமாரி (ஜேர்மனி), கோணேஸ்வரி (ஜேர்மனி), பிறேமகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை (திருநெல்வேலி), கிருபானந்தர் (ஜேர்மனி), தனலக்ஷ்மி (ஜேர்மனி), விஜயராசா (ஜேர்மனி), புலேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற வெற்றிவேல் (ஜேர்மனி) மற்றும் யோகசுந்தரம் (ஜேர்மனி), சிவாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(39550)
(7.6.3)

## மரக்கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கை

இந்த வருடம் ஒரு மில் லியன் மரக்கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.அதற்காக அரச நிறுவனங் கள் பலவற்றின் ஒத்து ழைப்பு பெறப்பட்டுள்ளது என்று அமைச்சின் செய லர் ஈ.எம்.யூ.டி. பஸ்நாயக்க தெரிவித்தார்.



### வீட்டுப் பணிப்பெண் தேவை

குழந்தை பராமரிப்பில் அனுபவம் உள்ள குடும்ப பொறுப்புக்கள் இல்லாத வீட்டில் தங்கியோ அல்லது காலை 7.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வுரை உதவி செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவைப்படுகிறார்.விருப்பமும் ஆர்வமும் உள்ளவர்கள் 0213216896 அல்லது 0750414544 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.








# மதிய உணவுக்கான நிதி கிடைப்பதில்லை

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.5

பாடசாலை மாணவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மதிய உணவு செயற்றிட்டத்துக்காக அரசினால் முறையாக நிதி ஒதுக்கப்படுவதில்லை. அதனால் அந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித் துள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள அதிகளவான கல்வி வலயங்களுக்கு மூன்று மாத காலமாக மதிய உணவு செயற்றிட்டத்துக்குரிய நிதித் தொகைகள் வழங்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் கூறினார்.

அதிகளவு பணத்தைச் செலவிட்டு நடத்திச் செல்லப்படும் கல்விச் சேவைகள் அமைச்சு தனது பொறுப்புக்களை முறையாக நிறைவேற்ற இயலாது போகுமானால், இந்த அமைச்சைக் கலைத்துவிட்டு அந்த நிதியை பாடசாலைகள் கட்டமைப்புக்கு வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மாத்திரம் மதிய உணவு செயற்றிட்டத்துக்காக ஏற்கனவே 89 மில்லியன்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளது. அந்த செயற்றிட்டத்தின் கீழ் உணவுகளை விநியோகிப்போர் சமுர்த்திப் பயனாளிகள் ஆவர். முறையாக பணத்தொகைகள் கிடைக்காததால் சில பாடசாலைகளில் இந்த மதிய உணவு செயற்றிட்டம் முழுமையாகவே நிறுத்தப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உணவு அட்ட வணைகள் கிடைப்பதில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வி அமைச்சை இரு தொகுதிகளாக்கி கல்விச் சேவைகள் அமைச்சு என்ற பெயரில் புதிய அமைச்சொன்று நிறுவப்பட்டுள்ளதோடு அந்த அமைச்சை நடத்திச் செல்வதற்கென அதிகளவு பணம் செலவிடப்படுகிறது.

எனினும் அந்த அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள் முறையாக நிறைவேற்றப்படுவதாகத் தெரியவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# தாமத கட்டணமாக ரூ.18 கோடி

கொழும்பு, நவ.5

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் சுமார் 18 கோடி 29 லட்சத்து 86 ஆயிரம் ரூபா தாமதக் கட்டணமாகச்செலுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வின்போதே மேற்குறிப் பிட்ட தொகை எரிபொருள் நிரப்புக் குதங்களின் தாமதக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு 23 கப்பல்களில் கொண்டு வரப்பட்ட எரிபொருளை இறக்குவதற்கான தாமதக் கட்டணமாக 9 கோடி 6 லட்சத்து 74 ஆயிரம் ரூபாவும் 2012 இல் 17 கப்பல்களில் கொண்டு வரப்பட்ட எரிபொருளை இறக்குவதற்கான தாமதக் கட்டணமாக 9 கோடி 23 லட்சத்து 12 ஆயிரம் ரூபாவும் செலுத்தப்பட்டுள் ளது. (ச-400-22)



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம் 2014 ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் திருத்தம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 23.10.2013 ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| தொ. இல. | விவரம் | மீளளக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள் வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகனத் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 8031000.00 | |
| 2 | சுன்னாகம் மீன் சந்தை | 1000.00 | 10000.00 | 981200.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல. 01 | 1000.00 | 10000.00 | 495000.00 | 250.00 |
| 4 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 39700.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 05 | 1000.00 | 10000.00 | 1221000.00 | 250.00 |
| 6 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 165600.00 | 250.00 |
| 7 | பொது மலசல கூடம் (சுன்னாகம் பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமை) | 750.00 | 7500.00 | 36300.00 | |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 24.10.2013 - 14.11.2013 பி.ப. 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 15.11.2013 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 15.11.2013 பி.ப. 2.00 மணிக்கு
மேலதிகமான விவரங்களை 23.10.2013 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடலாம்.

தி.பிரகாஷ்
தவிசாளர்
வலிகாமம் தெற்குப் பிரதேச சபை,சுன்னாகம்



# வற்றாளைக் கிழங்கு டெங்கை ஒழிக்கும்

## புதிய ஆய்வில் தகவல்



கொழும்பு, நவ.5

வற்றாளைக் கிழங்கை உணவாக உண்டால் டெங்கு நோயைக் குணப்படுத்திக்கொள்ள முடியும் என்று ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தகவலை ராஜகிரிய- ஆயுள்வேத வைத்திய விஞ்ஞான நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எஸ். கே.எம்.கே. ஹரபத்தெனிய தெரிவித்தார்.

வற்றாளைக் கிழங்கு , இலை மற்றும் தண்டு களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகளை உண்பதால் டெங்கு நோயாளர்களின் குருதித் துணிக்கைகளை அதிகரித்துக் கொள்வதற்கான விசேட ஆற்றல் கிடைக்கிறது. இதனை ஆயுள்வேத வைத்திய விஞ்ஞான நிறுவனத் தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தப் புதிய ஆய்வின் மூலம் நேரடிப் பரீட்சார்த் தங்களை மேற்கொண்டு சமுதாயத்திலிருந்து டெங்கு நோயை ஒழித்து விட விசேட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

# விளம்பரப் பதாகைகள் கிழித் தெறிந்து நாசம்

யாழ்ப்பாணம், நவ.5

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பதாகைகள் இனந்தெரியாதோரால் கிழித்து நாசமாக்கப்பட்டுள்ளன. குறித்த ஒரு நிறுவனத்தினால் காட்சிப்படுத்தப்பட்ட 30 பதாகைகள் இவ்வாறு நாசமாக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையம் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் விளம்பர நிறுவனங்களின் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறித்த ஒரு அச்சகத்தால் 'பிரிண்ட்' செய்யப்பட்ட விளம்பரப் பதாகைகள் மட்டுமே இனந்தெரியாதோரால் நாசமாக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தின் 30 இடங்களில் வைக்கப்பட்டிருந்த இந்த விளம்பரப் பதாகைகள் கடந்த மூன்று மாத காலப் பகுதியில் இனந்தெரியாதோரால் கிழித்து நாசமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் குறித்த அச்சகத்தினரால் கோப்பாய் மற்றும் யாழ். பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தொழில் பொறாமையினால் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த-5)

# பட்டப்பகலில் திருட்டு

பட்டப்பகலில் வீட்டுக்காரர் இல்லாததைப் பயன்படுத்தி வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள், பணம் என்பவற்றைத் திருட்டிச் சென்றுள்ளனர்.

இந்தத் துணிகர திருட்டுச் சம்பவம் கோப்பாய் வடக்கு வெங்காய சங்க வீதியில் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவரின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்காரர் அலுவல் நிமித்தம் வீட்டை விட்டு சென்றதைப் பயன்படுத்தி வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள், மற்றும் பணம் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டு சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-17)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கடலலையில்

இந்தச் சம்பவத்தில் கொழும்புத்துறை 4 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கனகலிங்கம் சிவலிங்கம் (வயது -47) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

கடற்றொழிலாளியான சிவலிங்கம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தனது நண்பர்கள் மூவருடன் இறால் பிடிப்பதற்காகப் படகில் புறப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறையிலிருந்து பிளாஸ்ரிக் படகில் நால்வரும் புறப்பட்டுள்ளனர். கரையிலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தூரத்தில் மீனவர் இறால் வலையை விரித்திருந்தார்.

அவர்கள் படகில் சென்று கொண்டிருந்தபோது கடலில் அலை அடிப்பது அதிகமாகியது. இதனால் படகுக்குள் முற்றாகக் கடல்நீர் நிறைந்ததால் அது மூழ்கத் தொடங்கியது. இதனால் நால்வரும் கடலில் குதித்து படகை புரட்டி அதற்குள் இருந்த நீரை வெளியேற்றினர். எனினும் தொடர்ந்து அலை அடித்துக் கொண்டிருந்தமையால் புரட்டிய படகை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர முடிவில்லை.

இதனால் நால்வரும் படகைப் பிடித்தபடி தத்தளித்தனர். ஒரு முறை கடல் அலை கடுமையாக அடித்ததால் படகில் பிடித்திருந்த கையை நழுவ விட்டார் சிவலிங்கம். அவருக்கு நீந்தத் தெரிந்தபோதும் கடல் அலையின் வேகத்துக்கு அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இதனால் அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டார். ஏனைய மூவரும் படகைப் பிடித்த வண்ணம் ஒரு மணி நேரமாகக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர். கடலில் தத்தளித்த வண்ணம் இருந்த அவர்களில் ஒருவர் தனது மேலங்கியைக் கழற்றி மேலே உயர்த்தியபடி நின்றுள்ளார். வெகுதூரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களே மேலங்கியை அடையாளங் கண்டு அங்கு சென்று அந்த மூவரையும் மீட்டுக் கரை சேர்த்தனர்.

சிவலிங்கத்தைத் தேடி மற்றொரு குழுவினர் படகில் சென்றபோதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நேற்றுக்காலை 8.30 மணியளவில் சிவலிங்கம் சடலமாக கடற்கரையிலிருந்து மீட்கப்பட்டார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப் பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-4-17)

### தமிழகத்திலும்

கைது செய் யப்பட்டுள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகளாக எவரும் கலந்துகொள்ளக்கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தில் மாணவர்களின் கூட்டமைப்பினர் சேப்பாக்கத்தில் இருந்து பிரசாரம் செய்தபடி தஞ்சை செல்ல முடிவு செய்தனர். இதனை நடிகர் சத்யராஜ் தொடங்கி வைப்பதாகவே இருந்தது. இதற்காக சேப்பாக்கத்தில் மாணவர் கூட்டமைப்பினர் கார்த்திக் தலைமையில் திரண்டனர்.

தகவல் கிடைத்ததும் பொலிஸார் விரைந்து சென்று மாணவர் கூட்ட மைப்பைச் சேர்ந்த 14 பேரை கைது செய்தனர். இதில் பங்கேற்ற ராஜீவ்காந்தி கொலை வழக்கின் குற்றவாளி பேரறிவாளன் தாயார் அற்புதம்மாளும் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு மாணவர் இயக்கம் சார்பில் பல்லாவரம் மறைமலை அடிகள் பாடசாலை மாணவர்கள் 30 பேர் தாம்பரம் ரயில் நிலையத்தில் மின்சார ரயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். இதன்போது இவர்களை தாம்பரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட போரில் விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவு நிகழ்ச்சி தொகுப்பாளர் இசைப்பிரியா கொடூரமாக படுகொலை செய்யப்படும் காணொலியை சனல்-4 தொலைக்காட்சி கடந்த சில நாள்களுக்கு முன்பு வெளியிட்டது. இது அனைத்து தரப்பினரிடமும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் தமிழக முன்னேற்ற காங்கிரஸ் கட்சி நேற்று திடீர் என அடையார் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கும் பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை.

ஆனாலும் தடையை மீறி தென்சென்னை மாவட்ட தலைவர் வேல்ராஜ் தலைமையில் மறியலில் ஈடுபட முயன்றனர். உடனே பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

இதில் கட்சி நிர்வாகிகள் குமார், பழனி உட்பட 75 பேர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வலி.வடக்கு

நாள்களுக்கு முன்னர் மீண்டும் அந்தப் பகுதிகளில் இராணுவத்தினர் வீடழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதியுடன் உரையாடியபோது இந்த நடவடிக்கைகளை நிறுத்துமாறு அவர் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி தொடர்ச்சியாக வீடுகள் அங்கு இடித்தழிக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதனைத் தடுப்பதற்கு தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வலி. வடக்கு மீள்குடியேற்றக்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் பொதுநலவாய மாநாடு நடைபெறுகின்ற சமயத்தில், சர்வதேசத் தலைவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அதே காலப்பகுதியில் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை தவிசாளர் கள், உறுப்பினர்கள் மற்றும் சகலரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஜனநாயக மக்கள் முன்னணி போன்ற தென்னிலங்கை அரசியல் சக்திகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. (த-5)

### இசைப்பிரியா

இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

"சனல்-4வில் இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் வெளிவந்த காட்சிகள் அனைத்தும் உண்மையானவை என்று அதனை பார்த்த அனைவரும் கூறுகின்றார்கள். இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் இந்த கொடூரத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன. எனவே, சனல் -4 வெளியிட்ட காணொலியை போலி என கூறி அரசு நிராகரிக்க முடியாது. இது சனல் 4 விடயமல்ல, இசைப்பிரியா படுகொலை விடயம் என்பதை அரசு மனதில் கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்; உண்மைகள் கண்டறியப்படவேண்டும்; இது இலங்கை அரசின் கடமையாகும். இதை தட்டிக் கழித்தால் பாரதூரமான பின்விளைவுகளை இலங்கை அரசு சந்தித்தே தீரும்.

நாட்டில் மனித உரிமைகள், சட்டங்கள் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத் தப்படுகின்றன என்று இலங்கை அரசு கூறுகின்றது. இது உண்மையானால் இசைப்பிரியாவின் படுகொலை தொடர்பில் விசாரணை நடத்திய உண்மையை கண்ட றிய வேண்டும்.

அரசு ஏன் இதற்கு தயக்கம் காட் டுகின்றது? இந்தப் படுகொலை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் பார்வை இலங்கைப் பக்கம் திரும்பியுள்ளது. எனவே, இசைப்பிரியாவின் குடும்பத்தினருக்கும் தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். இதிலிருந்து அரசு தப்பவே முடியாது" என்றும் அவர் கூறினார்.

### இருதய

திட்டத்துக்கு சுவிஸ் - இலங்கை வர்த்தக சபை 520 மில்லியன் ரூபா நிதியை வழங்க முன்வந்துள்ளது. அத்துடன் சுகாதார அமைச்சு 205 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. இதன்படி 725 மில்லியன் ரூபா செலவில் இந்த நான்கு மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த 24 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. சுகாதார அமைச்சு சார்பில் அமைச்சின் செயலாளர் மருத்துவர் நிஹால் ஜெயதிலகவும், சுவிஸ் - இலங்கை வர்த்தக சபை சார்பில் அதன் பொருளாளர் எஸ். ராஜ்குமாரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இருதய சிகிச்சை, இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை தொடர்பான சிகிச்சைகளை யாழ். போதனா வைத்தியசாலையில் செயற்படத்தப் பூரண வசதிகள் இல்லை. இதனால் தவிர்க்கப்படக் கூடிய உயிரிழப்புகளும் கொழும்பு வைத்தியசாலைகளுக்கு மாறப்பட வேண்டிய செலவுகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன - என்றார். (த-4)

### மிதிவெடி

முன்னெடுக்கப்பட்டு வந்தன. தற்போது இந்தப் பணிகளை இலங்கை அரசு பொறுப்பெடுத்துள்ளது.

இலங்கை அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய மிதிவெடி செயற்பாட்டுநிறுவகம் ஊடாக இந்தப் பணிகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக இலங்கை இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு மற்றும் ஐ.நா. முகவர் அமைப்பில் பணியாற்றிய ஒரு சிலர் இதில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் வட பகுதியில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காகத் தேசிய மிதிவெடி செயற்பாட்டு நிறுவகம் கிளிநொச்சியில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (த-5)

### டெங்கு

காலப்பகுதியில் 40 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

எனவே டெங்கு நுளம்பு தாக்கத்திலிருந்து விலகியிருப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும், சுற்றாடலில் உள்ள டெங்கு நுளம்பை அழித்து சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியிலிருந்து இதுவரையான காலப் பகுதி வரை 490 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டனர்.

கடந்த வருடம் 672 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

கொழும்பு சென்று திரும்புபவர்களே டெங்கினால் அதிகம் பீடிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-4)

### வெடி

னந்தன் மற்றும் பி.சதீஸ்குமார் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

மண்டைதீவில் கடந்த 29 ஆம் திகதி இரவு கடற்படையினரால் மூவரும் வெடிமருந்துடன் கைது செய்யப்பட்டனர். பின்னர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் நீதிவான் ஆர். எஸ். மகேந்திரராஜாவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். ஆரம்ப விசாரணையின் பின்னர் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (த-4)

### சிங்களக்

வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாவற்குழியிலுள்ள குறித்த அரச காணி வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுப்பதற்காகத் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் குறித்த காணியைப் பகிர்ந்தளிப்பது எனக்கு எதுவும் இதுவரையில் அறியத் தரப்படவில்லை.

குறித்த காணி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமானது. அந்தக் காணிக்கான் பொறுப்பு அவர்களுடையது. இந்தக் காணியை பங்கீடு செய்வதற்கு காணிக் கச்சேரி நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை.

இருப்பினும் குறித்த காணி வீடமைப்புத் திட்டத்துக்காகவே தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

தற்போது குறித்த காணியைக் குடியேற்றத் திட்டத்துக்கே தேசிய வீடமைப்பு அதிகார சபை பயன்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது பனங்கட்டிக்கொட்டு சென்.ஜோசப்

யாழ்ப்பாணம், நவ.5
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவரின் வெற்றிக் கிண்ணத்துக்காக மன்னார் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மன்னார், பனங்கட்டிக் கொட்டு, சென்.ஜோசப் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம் பெற்றது.
இறுதி ஆட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து மன்னார் பனங் கட்டிக் கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் கிறீன் பீல்ட் அணி வீரர் சோபன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன் படுத்தி தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.
ஆட்டம் சூடு பிடிக்க இரு அணியினரும் அபார ஆட் டத்தை வெளிப்படுத்தினர்.
முதல் பாதி ஆட்டம் முடிவதற்கு 33 நிமிடங்கள் இருக்கையில் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி வீரர் நிரஞ்சன் தனக்குக் கிடைத்த சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி முத லாவது கோலைப் போட் டார்.
இடைவேளைக்காக ஆட்டம் இடை நிறுத்தப்பட்ட போது இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற் றுச் சமநிலையில் இருந்த னர்.
இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் ஆட்ட வியூ கங்களை மாற்றி அபார மாக மோதிக் கொண்ட னர்.
கிறீன் பீல்ட் விளையாட் டுக்கழக அணியினர் தமக் குக் கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டனர்.
இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைய ஐந்து நிமிடங் கள் இருக்கையில் சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி வீரர் பியுஸ் லஸ் தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்து வெற்றியை உறுதி செய்தார்.
சென். ஜோசப் விளையாட் டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
சிறந்த வீரராக சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி வீரர் பியுஸ் லஸ் தெரிவானார்.
இலங்கை 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட தேசிய அணியில் விளையாடி வரும் ஜோண் சன், இசோர் ஆகிய இரண்டு வீரர்களுக்கும் மன்னார் உதைபந்தாட்ட லீக் தலா 20 ஆயிரம் ரூபா வழங்கிக் கௌரவித்தது.
இந்த இறுதியாட்டத்தில் விருந்தினராக வடக்கு மாகாண சபையின் கல்வி விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் மீன்பிடி போக்குவரத்துக் கிராமிய அபிவிருத்தி வணி கத்துறை அமைச்சர் பி.டெனிஸ்வரன், மன் னார் நகர பிதா எஸ். ஞானப்பிரகாசம், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் ரஞ்சித் றொட் றிக்கோ, மாகாண சபை உறுப்பினர்களான இ. ஆனால்ட், பிறிமுஸ் சிராய்வா, வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் தலைமை அதி காரி ஜெகனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)



## வென்றது யங்ஹென்றிஸ்



யாழ்ப்பாணம், நவ.5
மாலி சந்தி மைக்கல் விளை யாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நட்சத்திர உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற ஆடத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட் டுக்கழக அணி வெற்றி பெற் றது.
இளவாலை யங்ஹென் றிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் கொற்றா வத்தை றேஞ்சர்ஸ் விளை யாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென் றிஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# ஞானமுருகன், பாடும் மீன் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.5
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதி யுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மயிலங்காடு ஞானமுருகன், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் ஆகி யவை வெற்றி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங் காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளை யாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.5
மாலிசந்தி மைக்கல் விளை யாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நட்சத்திர உதைபந்தாட்ட தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோத வுள்ள அணிகளின் விபரம் வருமாறு:
**பிற்பகல் 3 மணி**
யங்ஹம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்.
**மாலை 4.30 மணி**
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம். (த-23)

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது நவஜீவன்ஸ்

யாழ்ப்பாணம், நவ.5
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத் தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி கடந்த 3ஆம் திகதி வவுனியா யங்ஸ்ரார் வி.க மைதானத்தில் இடம்பெற் றது.
இந்தப் போட்டியில் பருத்தித் துறை லீக்கில் அங்கம் வகிக்கும் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வவு னியா செவன் எயிட் சிக்ஸ் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.
இந்தப் போட்டியின் 2 ஆவது நிமிடத்தில் நவஜீ வன்ஸ் வி.க.வீரர் தகிருஷந் தனது அணிக்கான முதலா வது கோலிலைப் பெற்றுக் கொடுத்தார். பதி லுக்கு வவுனியா செவன் எயிட் சிக்ஸ் அணி 11ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பெற்றது.



தொடர்ந்து இடைவேளை யின் செவன் எயிட் சிக்ஸ் 49ஆவது நிமிடத்தில் தமது 2ஆவது கோலிலையும் போட்டு 2:1 என்ற நிலை யில் முன்னிலை பெற்றது.
ஆனாலும் நவஜீவன்ஸ் வீரர் த.கிருஷாந் 58 ஆவது நிமிடத்தில் தனது 2ஆவது கோலினையும் பெற்றுக் கொடுத்தார்.
ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்ட வேளையில் நவஜீவன்ஸ் வி.க. வீரர் கோ. பொபிநா தன் 87 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான மூன் றாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.
ஆட்டநேர முடிவில் நவ ஜீவன்ஸ் வி.கழகம் 3:2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (த)



யாழ்.மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாசம் சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் இணுவில் அபிராமி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டு சம்பியன் கிண்ணத்தை வென்றது.
கூட்டுறவுத்தின விழாவில் கலந்துகொண்ட 'சனச' சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய, சங்கத் தலைவர் செ.இலகுநாதனிடம் வெற்றிக் கிண்ணத்தை வழங்குகிறார். அருகில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் உள்ளார். (த-17)




## பயிற்சிப் போட்டிகளில் இலங்கை

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், இரண்டு 20/20 சர்வதேசப் போட்டி களிலும் பங்குபற்றவுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான தொடருக்கு முன்னதாக இலங்கை அணி பயிற்சிப் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளது.

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான தொடர் நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், பயிற்சிப் போட்டிகள் 5ஆம், 7ஆம் திகதிகளில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இலங்கை அணி அண்மைக் காலத்தில் சர்வதேசப் போட்டிகள் எவற்றிலும் விளையாடியிருக்காத காரணத்தால், நியூசிலாந்துத் தொடருக்காக வீரர்களைத் தயார் படுத்துவதற்காக இந்தத் பயிற்சிப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஓர் அணியில் இலங்கையின் பிரதானமான வீரர்கள் இடம்பெற்றிருக்க, மற்றைய குழாமில் இலங்கை ஏ குழாமில் இடம்பெறும் வீரர்களோடு, சில சர்வதேச வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்கள். அணி 1: திலகரட்ண டில்ஷான், திமுத் கருணாரத்ன, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, அஞ்சலோ மத்தியூஸ், அஷன் பிரியஞ்சன், நுவான் குலசேகர, சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத், லசித் மலிங்க, அஜந்த மென்டிஸ்

மேலதிக வீரர்கள்: அஞ்சலோ பெரேரா, நமித் நம்புக்வெல்ல, இசுரு உதான

அணி 2: குசால் பெரேரா, உபுல் தரங்கன, லஹிரு திரிமன்ன, டினேஷ் சந்திமால், கித்துருவன் விதானகே, சத்துரங்க டீ சில்வா, திஸர பெரேரா, சீக்குகே பிரசன்ன, டில்ருவான் பெரேரா, ஷமிந்த எரங்க, சுரங்க லக்மால்

மேலதிக வீரர்கள்: நுவான் பிரதீப், இஷான் ஜெயரத்ன, மிலிந்த சிறிவர்த்தன. (கு)

## ரோஹித் சர்மா புதிய அவதாரம்

இந்திய கிரிக்கெட்டின் புதிய கதாநாயகனாக உருவெடுத்துள்ளார் ரோஹித் சர்மா. இந்தியா வந்த ஆஸ்திரேலிய அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. ஏழாவது போட்டி பெங்களூரில் உள்ள சின்னசாமி மைதானத்தில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ரோஹித் சர்மா இரட்டைச் சதம்(209) அடித்து கைகொடுக்க, 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகள் இழப்புக்கு 383 ஓட்டங்கள் எடுத்தது.

கடின இலக்கை விரட்டிய ஆஸ்திரேலிய அணிக்கு ஜேம்ஸ் பால்க்னர்(116), மக்ஸ் வெல் (60) ஆகியோர் ஆறுதல் அளித்தனர். ஆஸ்திரேலிய அணி 45.1 பந்துப்பரிமாற்றங்களில் 326 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்து, 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.


இந்த வெற்றியின் மூலம் தொடரை இந்திய அணி 3-2 எனக் கைப்பற்றி கிண்ணத்தை வென்றது. ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது இந்தியாவின் ரோஹித் சர்மாவுக்கு வழங்கப்பட்டது.

இதுகுறித்து அவர் கூறுகையில், ஒருநாள் போட்டியில் இரட்டைச் சதம் அடித்தது மகிழ்ச்சியாக உள்ளது. இதற்கு ஐ.சி.சி..யின் புதிய களத்தடுப்பு விதிமுறைகள் கைகொடுத்தன.

இதன்படி கடைசி 10 பந்துப்பரிமாற்றங்களில் ஐந்து களத்தடுப்பாளர்களை, 30 யார் வட்டத்துக்குள் நிறுத்த வேண்டும் என்பதால் அதிரடியாகவும், சுலபமாகவும் ஓட்டங்கள் சேர்க்க முடிந்தது. பொதுவாக போட்டியில் அதிரடி ஆட்டத்துக்கு மாற சிறிது நேரம் எடுத்துக் கொள்வேன். இது தான் எனது துடுப்பாட்டப் பாணி. இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் நடுவரிசையில் களமிறங்க தெரிவு செய்யப்பட்டேன், ஆனால் போட்டியில் தொடக்க வீரராக களமிறக்கப்பட்டேன். இப்பணியை சிறப்பாகச் செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. வரும் காலங்களில் எந்த வரிசையில் களமிறங்குவேன் எனத் தெரியாது.

டெஸ்ட் போட்டியில் விளையாட வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு, இலக்கு. எல்லாம். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன். டெஸ்ட் போட்டியிலும் சாதிக்கும் பட்சத்தில். என்னை விட மகிழ்ச்சியான வீரர் யாரும் இருக்க முடியாது என்று தான் கூறுவேன் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஆஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் பெய்லி கூறுகையில். சச்சின் ஓய்வுக்கு பின் அவருடைய இடத்தைப் பூர்த்தி செய்ய ரோஹித் சர்மாவுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. இந்தியாவுக்கு எதிரான இத்தொடர் மிகவும் சவால் வாய்ந்ததாக இருந்தது. பந்துவீச்சாளர்களுக்கு பெரும் தலைவலியாக அமைந்தது. ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்காவை போல வேகப் பந்துவீச்சாளர்களால் இந்தியா வில் இலக்கை வீழ்த்த முடியவில்லை. ஷிகர் தவான், வொட்சன் ஆகியோருக்கு மத்தியில் எந்த வாக்குவாதம் ஏற்பட்டது என்று தெரியவில்லை. சில நேரத்தில் இப்படி நடப்பது சகஜம் தான். இரண்டு பக்கத்திலும் தவறு உள்ளது என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது. வீரர்கள் தோல்வியடையும் நேரத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்வதைவிட, வெற்றிபெறும் தருணங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (கு)






## ஜடேஜாவுக்கு அபராதம்

ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வொட்சனை அவதூறாக பேசியதற்காக இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பெங்களூரில் நடந்த இந்தியா- ஆஸ்திரேலியா இடையிலான 7ஆவது ஒருநாள், போட்டியில் இந்தியா அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் ஐ.சி.சி நடத்தை விதிமுறைகளின்படி ஜடேஜாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் 29ஆவது பந்துப்பரிமாற்றத்தின் போது வொட்சனை ஆட்டமிழக்கச் செய்தார் ஜடேஜா. அப்போது ஜடேஜா, வொட்சனைப் பார்த்து அவதூறான வார்த்தையைப் பிரயோகித்ததாகக் கூறப்படுகிறது. போட்டியின் முடிவில் தான் அவதூறாகப் பேசியதை ஜடேஜாவும் ஒத்துக் கொண்டார். இதுதொடர்பாக போட்டி நடுவர் ஆண்டி பைகிராப்ட் பிறப்பித்த தண்டனையையும் அவர் ஏற்றுக் கொண்டார். மேலும் களநடுவர் நிகல் லாங்கிடமும் அவர் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து ஜடேஜாவின் போட்டிக் கட்டணத்தில் 10 சதவிகிதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (கு)

## அபுதாபி போர்மியுலா போட்டியிலும் செபஸ்ரியன் வெட்டல் சாதித்தார்

அபுதாபி யஸ் மரீனா திடலில் இடம்பெற்ற ஆண்டின் 17ஆவது சுற்று போர்மியுலா 1 போட்டியிலும் ரெட்புள் அணியைச் சேர்ந்த செபஸ்ரியன்
வெட்டல் வெற்றி பெற்றார். இதன் மூலம் தொடர்ச்சியான ஏழாவது வெற்றியைப் பெற்று மைக்கல் சூமாக்கரின் சாதனையை சமன் செய்துள்ளார்.

போட்டியின் ஆரம்பத்தில் மார்க் வெபர், முதல் நிலையிலிருந்து ஆரம்பித்திருந்த போதிலும், செபஸ்ரியன் வெட்டலின் ஆக்ரோஷமான பந்தயத்தின் காரணமாக, போட்டியின் நிறைவில் சுமார் 30 செக்கன் வித்தியாசத்தை தனக்கும், இரண்டாமிடத்தில் நிறைவு செய்த மார்க் வெபருக்கும் இடையில் பதிவு செய்திருந்தார். மூன்றாமிடத்தை மேர்சடீஸ் அணியின் நிகோ ரொஸ்பேர்க் தன்வசப்படுத்தியிருந்தார்.

இந்த போட்டி ஆரம்பச் சுற்றிலேயே லோட்டஸ் அணியின் கிமி ரைக்கனன் விபத்தின் காரணமாக வெளியேறியிருந்தார். 2013ஆம் ஆண்டில் மேலும் இரண்டு போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையில் அடுத்த சுற்றுப் போட்டி அமெரிக்காவின் ஒஸ்டின் திடலில் நவம்பர் 15ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அபுதாபி போட்டியைத் தொடர்ந்து, அணிகள் தரப்படுத்தலில் ரெட்புள் அணி 513 புள்ளிகளுடன் முதலிடத்திலும், 334 புள்ளிகளுடன் மேர்சடீஸ் அணி இரண்டாமிடத்திலும், 323 புள்ளிகளுடன் பெர்ராரி அணி மூன்றாமிடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

சாரதிகள் தரப்படுத்தலில், 2013 ஆம் ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தை செபஸ்ரியன் வெட்டல் வென்றுள்ளதைத் தொடர்ந்து, தரப்படுத்தல் பட்டியலில் 347 புள்ளிகளை பெற்று முதலிடத்தில் காணப்படுகிறார். பெர்ராரி அணியின் பெர்ணான்டோ அலொன்சோ இரண்டாமிடத்தில் 217 புள்ளிகளுடனும், மூன்றாமிடத்தில் லோட்டஸ் அணியின் கிமி ரைக்கனன் 183 புள்ளிகளுடனும் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இந்திய வெற்றியில் கரும்புள்ளி அநாகரிகமாக நடந்த ஷிகர் தவான்

ஆஸ்திரேலியாவை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது.
இந்தப் போட்டியில் எதிரணி வீரர் ஒருவரை ஷிகர் தவான் கிண்டல் செய்துள்ளார். 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசிவிட்டு ஷேன் வொட்சன் காயம் காரணமாக மேலும் வீச முடியாமல் வெளியேறினார்.



பிறகு துடுப்பெடுத்தாடும் போது களமிறங்கினார். அப்போது ஆஸ்திரேலியா 6 இலக்கு இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்திருந்தது.
ஷேன் வொட்சனால் கெந்திக் கெந்திதான் ஓட முடிந்தது. புதிய விதிகளின் படி 'பை-ரன்னர்' கிடையாது. இந்த நிலையில் முதல் பந்தை தடுத்தாடினார். தவான் அதனைப் பிடித்தார்.
அத்தோடு நில்லாமல் மிகவும் அசிங்கமாக காயமடைந்து முடியாமல் கெந்திக் கெந்திச் சென்ற வொட்சனை கேலி செய்வது போல் அதே போல்
தானும் கெந்திக் கெந்தி நடந்து செய்கை செய்தார். காயமடைந்த வீரரை கேலி செய்வது அநாகரிகமான செயலாகும். இந்தியா பெற்ற அபார வெற்றியில் தவானின் நடத்தை ஒரு கரும்புள்ளியாக அமைந்துள்ளது.
(த)


**வீடு வாடகைக்கு தேவை**

நல்லூர், திருநெல்வேலி, ஆனைப்பந்தி, அத்தியடி போன்ற இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 037 6549

புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளது

வங்கியியல் கற்கைநெறிகள்
CBF&DBF (Weekday classes)
(Tamil & English Medium)

Chartered
CAB 1 & CAB 11
(Tamil & English Medium)

Aat (srilanka)
Final (Tamil & English medium)

Further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382


# பயிற்சிப் போட்டி சமநிலை

மேற்கிந்திய தீவுகள், உத்தர பிரதேச அணிகளுக்கு இடையிலான மூன்று நாள் பயிற்சி போட்டி சமநிலையில் முடிந்தது.
இந்தியா வந்துள்ள மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டு டெஸ்ட், மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.
முதல் டெஸ்ட் நாளை கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் ஆரம்பமாகிறது.
இப்போட்டிக்கு முன் மேற்கிந்திய தீவுகள், உத்தர பிரதேச அணிகளுக்கு இடையிலான மூன்று நாள் பயிற்சி போட்டி கொல்கத்தாவில் நடந்தது.
முதல் இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 466 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் முடிவில், முதல் இன்னிங்சில் உத்தர பிரதேசஅணி 5 இலக்குக்கு 206 ஓட்டங்கள் எடுத்திருந்தது.
நேற்று முன் தினம் மூன்றாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. அபாரமாக ஆடிய பர்விந்தர் சிங்(112) சதம் அடித்தார். அணித்தலைவர்
பியுஸ் சாவ்லா(46), அமிர் கான்(47) அரைசதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தனர். முடிவில் 9 இலக்குக்கு 372 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.
பின் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பாவெல்(15) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய கிறிஸ் கெய்ல்(58), சாமுவேல்ஸ்(58), ராம்தின்(41) நம்பிக்கை அளித்தனர். ஆட்டநேர முடிவில் 2ஆவது இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 இலக்குக்கு 199 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இதனையடுத்து இப்போட்டி சமநிலை என அறிவிக்கப்பட்டது. (த)


**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 09.11.2013 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. மாலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00 (இடமில்லை)

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 07.11.2013
1. காலை 09.00-11.00 2. காலை 11.00-01.00

குறிப்பு: பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை

SAAMSON Language School யாழ்நகர். 077 621 4567


# நன்றி கூறும் மாலைவேளை




" 3 ஆண்டுகளில் ஒரு பிரதேசத்துக்குரிய நிறுவனமாக இருந்த போதும் மாதாந்தம் 1000 க்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் ஆலோசனை பெறும் அதிசயம் "
" இதனால்" விசா ஆலாசகர்கள் கட்டமைப்பால் சாதனை விருதுக்கு சிபார்சு பெற்றோம்.
" உங்கள் எழுத்துக்களால் உந்தப்பட்டு கவரப்பட்டு உங்கள் பாணியைப் பின்பற்றியே. இந்த மகத்தான வெற்றியை நாங்கள் கண்டதாக பகிரங்கமாக ஒப்புக் கொண்டு நிற்கின்றோம்."

## திரு. N. வித்தியாதரன்
(மூத்த, மூச்சான, வீச்சான ஊடகவியலாளர்)

காலம்:- 05.11.2013
மாலை: 5.30
T.P 0212219016

சந்தைப்படுத்தல் பிரிவு
திசைகாட்டி குழுமம்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.